# அரங்கம்

செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, டிசம்பர் 21, 2018. இதழ் - 44









### இங்கிதம் மறந்துவிட்டோமா?

நான் சற்றுப் பழையவன். எனது பாடசாலையும் அதன் ஆசான்களும்...

பக்கம் - 08

### 365 நாட்கள் வகுப்பு நடத்தும் தனியார் கல்வி நிறுவனங்கள் சாதித்தது என்ன?



தனியார் நிறுவனங்களின் கல்வி நடவடிக்கைகளில் மாநகர சபை தலையிட்டுள்ளது....

பக்கம் - 03



### தெற்கின் சந்திரிக்காவும் வடக்கின் சந்திரகலாவும்

தமிழறிஞர் ஒருவர், தெருவில் சென்று கொண்டிருந்தார்...

பக்கம் - 11



### சுனாமியில் பிரிந்த மகளுக்கு ஒரு தாயின் கடிதம்..

செல்ல மழையும் நீ ..சின்ன இடியும் நீ. என் அன்பான செல்ல மகள்,

பக்கம் - 07



## இலங்கையின் புதிய அமைச்சரவை பதவியேற்றது

இலங்கையின் 29 உறுப்பினர்களைக் கொண்ட புதிய அமைச்சரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்பாகப் பதவியேற்றது.

ஆனாலும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் பிரேரிக்கப்பட்ட பெயர்களில் சிலரது பெயர்களை, அமைச்சர்களாக நியமிக்க ஜனாதிபதி மறுத்துவிட்டதாகத் தெரிகிறது. இது குறித்து இருவருக்கும் இடையில் நீண்ட நேரம் கலந்துரையாடல் நடந்ததாகவும், ஆனாலும் 29 பேருக்கு மாத்திரமே ஜனாதிபதி அனுமதி வழங்கியதாகவும் கூறப்படுகின்றது.

புதிய அமைச்சர்கள் விபரம் வருமாறு.

1. ரணில் விக்கிரமசிங்க -- பிரதமர், தேசியக் கொள்கை, பொருளாதார விவகாரம், புனர்வாழ்வு மீள்குடியேற்றம், வட மாகாண அபிவிருத்தி, தொழில் பயிற்சி, திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரம்.

2. ஹரின் பெர்ணாண்டோ -- தொலைத்தொடர்பு, டிஜிட்டல் உட்கட்டுமானம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டு.

3. ஜோண் அமரதுங்க -- சுற்றுலா அபிவிருத்தி, வன விலங்குகள் மற்றும் கிறிஸ்தவ விவகாரம்.


4. காமினி ஜயவிக்கிரம பெரேரா -- புத்தசாசன மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி.

5. மங்கள சமரவீர -- நிதி மற்றும் ஊடகம்

6. லக்ஸ்மன் கிரியெல்ல -- பொது நிறுவனங்கள், கண்டி பாரம்பரியம் மற்றும் கண்டி அபிவிருத்தி.

தொடர்ச்சி... (பக்கம் -02 )

## தேசிய நீர் வழங்கல் சபையின் அறிவிப்பு



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் அலுவலகம், குளோரின் அகற்றும் மற்றும் இதர நீர் வடிகட்டிகளை விற்பனை செய்யும் எந்தவொரு நிறுவனத்திற்கும் அதனை விற்பனை செய்வதற்கு எதுவித சிபாரிசும் வழங்கவில்லை என்று அதன் மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் பொறியியலாளர் டி.ஏ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயமாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. ‘அண்மைக் காலமாக நீர் வழங்கல் சபையின் இலச்சினை அல்லது நீர் தாங்கியுடனான படம் மற்றும் சபையிடமிருந்து அனுமதி பெற்றுக்கொண்டவாறான வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டமை கண்டறியப் பட்டுள்ளதுடன் அதனை மேற் கொண்டவர்களுக் கெதிராக உரிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் தேசிய நீர் வழங்கல் சபையானது இலங்கையின் தர நிர்ணயம் (SLS 614:2013) மற்றும் சர்வதேச தர நிர்ணயம் (ISO:2008)

தொடர்ச்சி... (பக்கம் -02 )

## இடைக்காலக் கணக்கு அறிக்கை

இடைக்காலக் கணக்கு அறிக்கை வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட உள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இடைக்கால கணக்கு அறிக்கையை நிறைவேற்றிக் கொண்டால் மாத்திரமே ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் அரச செலவுகளை சரியான முறையில் மேற்கொள்ள முடியும்.

எதிர்வரும் 3 மாத காலப் பகுதிக்கான அரசாங்கத்தின் செலவைச் சமாளிப்பதற்கு என இந்த இடைக்கால கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

உலகப் பொருளாதார நிலைமை மற்றும் தற்பொழுது இலங்கையில் உள்ள பொருளாதார சூழ்நிலை தொடர்பில்



கவனத்திற் கொண்டு வழங்கக்கூடிய ஆகக்கூடிய நிவாரணத்தைப் பொதுமக்களுக்குப் பெற்றுக் கொடுக்க பிரதமர் ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றார்.




தொடர்ச்சி...

## இலங்கையின் புதிய அமைச்சரவை பதவியேற்றது

7. ரவூப் ஹக்கீம் -- நகர திட்டமிடல், நீர் விநியோகம் மற்றும் உயர் கல்வி.
8. திலக் ஜனக மாரப்பன -- வெளிவிவகாரம்.
9. ராஜித சேனரட்ண - சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியம்.
10. மொஹமட் ஹசீம் மொஹமட் கபீர் - நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்தி.
11. ரஞ்சி மத்துமபண்டார -- பொதுநிர்வாகம் மற்றும் இடர்கால முகாமைத்துவம்.
12. ஹரியந்த கருணதிலக -- காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு.

13. சஜித் பிரேமதாஸ -- வீடமைப்பு மற்றும் கலாசார விவகாரம்.
14. அர்ஜுன ரணதுங்க -- போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து.
15. ரவி கருணநாயக்க -- சக்தி, வலு மற்றும் வணிக நிறுவன அபிவிருத்தி
16. வஜ்ர அபேவர்த்தன -- உள்நாட்டு மற்றும் உள்விவகார மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி.
17. பாட்டாளி சம்பிக ரணவாக்க -- பெருநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி.
18. நவீன் திஸாநாயக்கா -- பெருந்தோட்ட கைத்தொழில்.
19. பழனி திகாம்பரம் -- மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி.
20. சந்திராணி பண்டார -- பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரம் மற்றும் வறள் வலய அபிவிருத்தி.
21. பி. ஹரிசன் -- விவசாயம், கிராம பொருளாதார விவகாரம், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன மற்றும் மீன்பிடி மற்றும் கடல் வள அபிவிருத்தி.
22. தலதா அத்துக்கொரள -- நீதி மற்றும் சிறை மறுசீரமைப்பு.
23. அகில விராஜ் காரியவசம் -- கல்வி
24. அப்துள் ஹலீம் முகமட் ஹசீம் -- தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் மத விவகாரம்.

25. சாகல ரட்ணாநக்க --- துறைமுகங்கள் மற்றும் கப்பல் மற்றும் தெற்கு அபிவிருத்தி.
26. மனோ கணேசன் --- தேசிய நல்லிணக்கம், அரச கரும மொழி, சமூக முன்னேற்றம் மற்றும் இந்து மத விவகாரம்.
27. தயா கமகே --- தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சமூக வலுவூட்டல்.

28. மலிக் சமரவிக்கிரம --- அபிவிருத்தி தந்திரோபாயங்கள், சர்வதேச வணிகம் மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுகள்.

29. அப்துள் றிசாத் பதியுதீன் --- கைத்தொழில் மற்றும் வர்த்தகம், நீண்டகாலமாக இடம்பெயர்ந்தோருக்கான மீள்குடியேற்றம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி.

## சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு -2018

மாவட்ட செயலகம், சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகமும் இணைந்து நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு எதிரவரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை பாலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களை வலுவூட்டுதல், உள்வாங்குதல் மற்றும் சமத்துவத்தினை உறுதிப்படுத்துதல் என்ற தொனிப்பொருளில் நடைபெறும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வில் பாடசாலைகளில் திறமைகளைக்காண்பித்த, போட்டிகளில் வெற்றி ஈட்டியவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

நிகழ்வில், 2018ஆம் ஆண்டு நடைபெற்ற 5ம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையை வெளிப்படுத்திய, 2017ம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் திறமையை வெளிப்படுத்திய மட்டக்களப்பு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் கௌரவிப்படவுள்ளனர்.

அத்துடன், 2016. 2017ம் ஆண்டுகளில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளவர்கள் தெரிவு செய்யப்பட்டு 25000 ரூபா பெறுமதியான பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் மாவட்ட சமூக சேவைகள் பிரிவு தெரிவித்துள்ளது.

அதே நேரம், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய தடகள விளையாட்டு விழாவில் தேசிய ரீதியில் வெற்றிபெற்ற வீர வீராங்கனைகளுக்கு தலா 5000 ரூபா பெயுமதியான பணப்பரிசு, சுயசக்தி அபிமானி நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு ரூபா 5000 பெறுமதியான பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.

தொடர்ச்சி... (பக்கம் -04 )

## நர்த்தன பவனத்தின் ஒளிவிழா



நர்த்தன பவனம் நாட்டியாலயத்தின் ஒளிவிழா மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

நர்த்தன பவனம் நாட்டியாலயத்தில் அதன் ஸ்தாபகர், திருமதி. ஷர்மிலதா பிரபாகரன் அவர்கள் தலைமையில் மண்முனை வடக்கு கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில், கலாசார உத்தியோகத்தர் திருமதி. அமலின் ரஞ்சித்துமார் அவர்கள் அதிதியாகக் கலந்து சிறப்பித்தார் . இவ்விழாவில் 60திற்கு மேற்பட்ட



மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதில் பாலன்பிறப்பை கருப்பொருளாகக் கொண்டு பல நடனங்களும் பாடல்களும் இடம்பெற்றன. இவற்றை நெறிப்படுத்தி, அரங்கேறியவர் நாட்டியாலயத்தின் ஸ்தாபகர்

'நாட்டிய பூஷணி'திருமதி. ஷர்மிலதா பிரபாகரன்.

தொடர்ச்சி...

## தேசிய நீர் வழங்கல் சபையின் அறிவிப்பு

ஆகியவற்றின் நியமங்களுக்கேற்ப நீரை சுத்திகரித்து வழங்குவதனால்

அந்த நீரிலுள்ள குளோரினையோ அல்லது ஏனைய கனிமங்களையோ அகற்ற வேண்டிய எதுவித தேவையும் இல்லை என்பதோடு, இது குறித்த விடயத்தில் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்குமாறும்' அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்

மலர்வு
1962
07
28

உதிர்வு
2018
12
14



மண்டூரைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட

### திரு. சிவபாதசுந்தரம் சிவசீலன்

(பாதுகாப்பு உத்தியோகத்தர், K - Hill Engineering (Pvt.) Ltd.)
அவர்கள் 14.12.2018 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற **சிவபாதசுந்தரம்** (ஓய்வுபெற்ற குடியேற்ற அதிகாரி) **திருமதி ஞானாம்பிகை சிவபாதசுந்தரம்** தம்பதியினரின் பாசமிகு மகனும் **தேன்மொழி** (ஆசிரியை, மட்/ ஆரையம்பதி ம.வி.) அவர்களின் அன்புக் கணவரும் **ஆதிரை, பிரணவி** (மாணவிகள்,மட் / வின்சன்ற் மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற **சாரங்கபாணி** (ஓய்வுபெற்ற அதிபர்) **திருமதி மகேஸ்வரி சாரங்கபாணி** தம்பதியினரின் பாசமிகு மருமகனும் **அசோகாம்பிகை** (மண்டூர்அசோகா - ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் பெறாமகனும், **சிவவரதன், சிவவதனி** (ஆசிரியை) **சிவமுரளீதரன், சிவகாந்தன், சிவபாரதி** (ஆசிரியர்), **சத்தியவாணி** (தபாலதிபர்), **சத்தியகீதன்** (மக்கள் வங்கி)ஆகியோரின் பாசமிகு சகோதரரும் **குமுதா** (ஆசிரியை), **அருள்மொழி** (மாவட்ட சமூக சேவை அதிகாரி), **அறிவழகன்** (பிரதம முகாமைத்துவ உதவியாளர்), **அன்பழகன்** (பிரான்ஸ்), **சிவகுமரன்** (ஈஸ்ட் லிங் முகவர் அஞ்சல் அலுவலகம்), **அபராஜிதன்** (கிழக்குப் பல்கலைக்கழகம்), Dr. **உதயணன்** (சுதேச மருத்துவத் திணைக்களம், திருகோணமலை- கி.மா), **மணிவண்ணன்** (சிறுவர் நன்னடத்தை அதிகாரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் 16.12.2018 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்திலிருந்து காலை 10.00 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு கள்ளியங்காடு இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

59/30, திசவீரசிங்கம் சதுக்கம் மேற்கு,
கூழாவடி, மட்டக்களப்பு.

தகவல்
குடும்பத்தினர்

## விளம்பரம்



# 365 நாட்கள் வகுப்பு நடத்தும் தனியார் கல்வி நிறுவனங்கள் சாதித்தது என்ன?

## மாணவர்களின் குழந்தைப் பராயத்தை பலி கொடுக்க முடியாது

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் உள்ள மாணவர்களின் சுவாத்தியம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில் தனியார் நிறுவனங்களின் கல்வி நடவடிக்கைகளில் மாநகர சபை தலையிட்டுள்ளது.

மார்கழி மாதத்தில் குறிப்பிட்ட காலப் பகுதியில் மாணவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனங்கள் விடுமுறை வழங்க வேண்டும் என்று அது உத்தரவிட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் அரசாங்க கல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்கு வழமையாகவே விடுமுறை வழங்குவது வழக்கம்.



அத்துடன், தனியார் கல்வி நிறுவனங்கள் தமது கல்வி கற்பிக்கும் நிலையங்களில் சுவாத்திய நிலையை உறுதி செய்த பின்னர் மீண்டும் கல்வி நடவடிக்கைகளை தொடர வேண்டும் என்னும் தீர்மானத்தை மாநகர சபை நிறைவேற்றியுள்ளது.

இது சரியா, தவறா என்று பலதரப்பிடம் அரங்கம் ஆசிரிய பீடம் பேசியது. பத்திரிகையின் ஆசிரியர் என்ற வகையில் எனக்கு தனிப்பட்ட அபிப்பிராயம் இந்த விடயத்தில் இருக்கின்ற போதிலும், எனது தனிப்பட்ட முடிவு இந்த விடயத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது என்ற காரணத்துக்காக, பல தரப்பிடமும் கலந்தாலோசித்த பின்னரே இந்தக் குறிப்பை நான் இங்கு எழுதுகின்றேன்.

மாநகர சபையின் இந்த நடவடிக்கையை பொதுமக்கள் பலரும் பாராட்டவே செய்திருக்கிறார்கள். க.பொ.த. சாதாரண தர பரீட்சை முடிந்தவுடன் உடனடியாக தனியார் கல்வி நிறுவனங்கள் நடவடிக்கையை ஆரம்பிப்பதை அதிகமான பெற்றோர் எதிர்க்கிறார்கள். இது அந்தக் கல்வி நிறுவனங்கள் பணம் சேர்ப்பதை மனதில் கொண்ட நடவடிக்கை என்றே அவர்கள் விமர்சிக்கிறார்கள்.

இந்த விடயத்தில் மாநகரசபையின் இந்த நடவடிக்கையை எதிர்க்கும் மிகச்சிறிய தரப்பு கூறும் வாதம், 'உயர்தர பரீட்சைக்கான போட்டி காரணமாக ஏனைய பகுதி மக்களோடு போட்டி போட வேண்டியுள்ளது மற்றும் பாடத்திட்டத்தை முடிக்க கால அவகாசம் போதாது' என்பவையாகும்.

ஆனால், இந்த வாதங்களை ஆதரிக்க எம்மால் முடியவில்லை. பாடத்திட்டத்தை முடிக்க கால அவகாசம் போதாது என்றால் அதனை மாற்ற அல்லது குறைக்க முயற்சிக்க வேண்டும். அதற்கு உரிய திட்டம் வேண்டும். அதைவிடுத்து மாணவர்கள் மீது எதனையும் திணிக்க முயல்வது ஆபத்து. மாணவர்கள் என்பவர்கள் உண்மையில் அரைக் குழந்தைகள். அவர்களது குழந்தைப் பிராயத்தை மதிக்க வேண்டும். அது போதுமான நிதானமாக, நின்மதியாக கழிய வேண்டியது அவசியம். இப்படியான திணித்தல்கள், அளவுக்கு அதிகமான கல்வி உட்புகுத்தல்கள் அவர்களை வேதனைக்கு உள்ளாக்கும். உண்மையில் அப்படிச் செய்வது ஒரு வகையில் மனித உரிமை மீறலும் கூட.

இன்னுமொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. மாணவர்கள் மத்தியில் விளையாட்டு மற்றும் ஏனைய உடற்பயிற்சிக்கான நடவடிக்கைகள் குறைந்து போய்விட்டன என்பது இன்னுமொரு குற்றச்சாட்டு. இதனையும் தவிர்க்க வேண்டும். இதற்காக வாரத்தில் ஒருநாளாவது கட்டாயமாக மாணவர்களுக்கு ஓய்வுநாளாக ஒதுக்கப்பட வேண்டும்.

தனியார் வகுப்புகளின் ஆசிரியர்கள் இந்த தனியார் வகுப்புகள் மூலம் (இவர்களில் பெரும்பாலானோர் அரச பள்ளிக்கூடங்களிலும் கற்பிப்பவர்கள்) லட்சக் கணக்கில் பணம் சம்பாதிக்கின்றார்கள் என்றும் ஆகவே அதனை அவர்கள் இழக்க விரும்பாமையே, 365 நாளும் வகுப்புகளை வைக்க அவர்களை தூண்டுகின்றது என்றும் குற்றச்சாட்டு உண்டு. அதற்காக மாணவர்களின் குழந்தைப் பராயத்தை பணயம் வைக்க முடியாது.

அடுத்தது அரசாங்க மற்றும் தனியார் பள்ளிகள் மற்றும் வகுப்புக்களில் மாணவர்களுக்கு சுவாத்தியமான இடங்களை ஒதுக்குதல் சம்பந்தப்பட்ட விடயம். இங்கு மட்டக்களப்பு மாநகரிலேயே தகரக் கொட்டகைகளில் வகுப்புக்கள் நடப்பதை நான் பார்த்திருக்கின்றேன். இந்த காற்றோட்டம் இல்லாத தகரக் கொட்டகை வகுப்புக்கள் மாணவர்களை வாழ் நாளைக்கு சுகவீனமுற்றவர்களாக மாற்றிவிடும் ஆபத்தானவை. அது கல்விக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையே. இவை அகற்றப்பட வேண்டும் அல்லது அப்படியான கல்வி நிறுவனங்கள் தடை செய்யப்பட வேண்டும். இந்த வசதிகளில் குடிதண்ணீர் மற்றும் மலசல கூட வசதிகளும் அடக்கம்.

அடுத்தது ஏனைய பகுதி மாணவர்களுடன் போட்டி போட வேண்டியுள்ளதே என்ற விவகாரம். உண்மைதான். போட்டிப் பரீட்சை அதீத பிரச்சினையாக உருவெடுத்துள்ளமை உண்மையே. ஆனால், இவ்வளவு நாளும் அளவுக்கு அதிகமான நாட்கள் ரியூசன் நடத்தி, அளவுக்கு அதிகமான தொகையை கட்டணமாகச் செலுத்தி, எந்த அளவுக்கு மட்டக்களப்பு மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியை இந்த தனியார் நிறுவனங்களால் அதிகரிக்க முடிந்திருக்கின்றது என்பதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கின்றதா?

அதுமாத்திரமல்ல, இன்னுமொரு அடிப்படைக் கேள்வியும் இங்கு இருக்கிறது. பல கோடி ரூபாய்கள் மக்கள் வரிப்பணத்தை செலவு செய்து, மிகப்பெரிய ஒரு கல்வித்திணைக்களத்தை உருவாக்கி, அதன் மூலம் இலவசமாக மாணவர்களுக்கு கல்வி வழங்க ஏற்பாடு செய்தும், இந்த இலவசக் கல்வி பெறும் அனைத்து மாணவர்களும் தனியார் ரியூசன்களுக்கு சென்றால்தான் பரீட்சையில் வெற்றி பெற முடியுமென்றால், இந்தக்கல்வித்திணைக்களத்தின் நடவடிக்கை அடிப்படையிலேயே தோல்வி என்று ஆகிவிடாதா? இந்த அடிப்படைப் பிரச்சினையை தீர்க்க ஏன் இவ்வளவு நாளும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் மாநகர சபைக்கு இருக்கக்கூடிய அதிகாரம் மிகக்குறைவாகும். கல்வித்திணைக்களத்துக்குத்தான் அது தொடர்பில் அதிக அதிகாரம் இருக்கிறது. ஆனால், தனியார் வணிக நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட மிகச் சிறு அதிகாரத்தை வைத்துக்கொண்டே மாநகர சபை இவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென்றால், இது மாதிரியான விடயங்களில் அதிக அதிகாரத்தைக் கொண்ட கல்வியமைச்சும், கல்வித்திணைக்களமும் திட்டமிட்டுச் செயற்பட்டால் இன்னும் எவ்வளவோ அதிகமான சாதகமான தாக்கத்தை மாணவர்களின் கல்வியில் ஏற்படுத்தலாமே. மாநகர சபை நடவடிக்கையை நாமும் எச்சரிக்கையுணர்வுடன் பாராட்டுகின்றோம். கல்வி அமைச்சு தனது திட்டங்களை மேம்படுத்தி மாற்றங்களை கொண்டு வரட்டும்.

இறுதியாக, இப்படியான கட்டுரையை எழுதுவதால் தனியார் கல்வி நிலையங்கள் "அரங்கம் செய்திகள்" பத்திரிகையின் மீது கோபம் கொள்ளலாம். எமக்கு விளம்பரங்களை வழங்குவதை அவை தவிர்க்கலாம். அதற்காக மக்களுக்கு நல்லது என்று பட்டதை நாம் சொல்லாமல் இருக்க முடியாது. இனியும் அதைக் கடுமையாகச் சொல்லவே செய்வோம். அதனையும் தாண்டி நல்ல இதயம் கொண்ட தனியார் கல்வி நிறுவனங்கள் இருக்குமாயின் அவை எமக்கு விளம்பரங்களை தரட்டும். அவை போதும்.

**சீவகன் பூபாலரட்ணம்**

விளம்பரம்

**திருப்பெருந்துறையில் காணி விற்பனைக்கு**

மட்டக்களப்பு திருப்பெருந்துறையில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 071 6165785

விளம்பரம்



# தமிழர்- முஸ்லிம் அரசியல் ஐக்கியம் காலத்தின் கட்டாயம்

(தமிழர்- முஸ்லிம் என்ற பெயர்கொண்டு இந்நாட்டின் இரு சிறுபான்மை இனங்களையும் அழைப்பதில் எனக்குப் பிரச்சினையுண்டு. தமிழர் என்பது ஓர்இனத்தின் பெயர். முஸ்லிம் என்பது ஒரு மதத்தைப் பின்பற்றுபவர்களின் பெயர். இலங்கை முஸ்லிம்களின் இனப் பெயரென்ன? இந்தச் சர்ச்சையை நான் ஏற்கனவே வேறோரிடத்தில் விளக்கியுள்ளேன். ஆதலால் தமிழர்-முஸ்லிம் என்ற பெயர்களை வசதிக்காக இங்கு கையாளுகின்றேன்)

கடந்த சில வாரங்களாக நாட்டில் நடக்கும் அரசியல் சூதாட்டம் வெறுமனே கட்சிகளுக்கிடையேயும், ஆளும் கட்சிக்கும் ஜனாதிபதிக்கிடையேயும், நடைபெறும் அதிகாரப் போரட்டம் மட்டுமல்ல, அதற்கெல்லாம் மேலாக ஜனநாயகத்துக்கும் சர்வாதிகாரத்துக்குமிடையே நடக்கும் ஒரு ஜீவமரணப் போராட்டம்.

இந்தப் போராட்டம் இன்று வரை முற்றுப்பெறாது தொடர்வதற்குக் காரணம் பாராளுமன்றத்தில் தமிழர், முஸ்லிம் அங்கத்தவர்களுள் பெரும்பான்மையினர் ஜனநாயகம் நிலைக்க வேண்டுமென்ற தமது கொள்கையில் விடாப்பிடியாக நின்றமையாகும். இது பெருமைப்பட வேண்டிய ஒரு விடயம். இவர்களுடன் பெரும்பான்மைச் சமூகத்தின் முற்போக்குவாதிகளும் சேர்ந்து கொண்டமை அரசியல் இருளிற் சிக்குண்டு தவிக்கும் இலங்கை வானிற் தோன்றிய ஒரு விடிவெள்ளியாய் அமைந்துள்ளது. இதன் பின்னணியில் ஒரு முக்கியமான உண்மையை இலங்கைவாழ் தமிழர்களும் முஸ்லிம்களும் உணரவேண்டியுள்ளது. கடந்த சில தசாப்தங்களாக பெரும்பான்மை இனத்தினரிடையே வளர்ந்துள்ள பேரினவாதச் சக்திகள் சிறுபான்மை இனங்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் குந்தகம் விளைவிப்பனவாக இயங்குகின்றன என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. இதுவரை சிறுபான்மை இனங்கள் அனுபவித்த இன்னல்களும் இழப்புகளுமே இதற்குச் சான்று.

இந்தச் சக்திகளின் செல்வாக்கு பெரும்பான்மை அரசியற் கட்சிகளுக்குள்ளும், பௌத்த சங்கத்தினுள்ளும் பாதுகாப்புத் துறைக்குள்ளும் ஊடுருவியிருப்பதை யார்தான் மறுப்பர்? இந்தச் சக்திகளுக்குப் பின்னால் ஒரு பெரும்பான்மைப் பணக்கார வர்க்கமும் அவர்களின் புதினப் பத்திரிகைகளும் ஒலி, ஒளி ஊடகங்களும் செயற்படுகின்றன என்பதும் கண்கூடு.

சில வெளிநாட்டுச் சக்திகளும் இவர்களின் பலத்துக்கு உரம்போடுகின்றன என்றும் சில நடுநிலை அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த நிலையில் இப்பேரினவாதச் சக்திகள் ஆட்சியைக் கைப்பற்றுமாயின் அது ஒரு சர்வாதிகாரப்போக்கினைக் கடைப்பிடிக்கும் என்பதில் சற்றேனும் ஐயமுண்டா? எழுபதாண்டுகளுக்கும் மேலாக இங்கே நிலைத்திருக்கும் ஜனநாயக ஆட்சிமுறைக்கு அவர்களின் ஆட்சி சாவுமணியாக அமையாதா? அவ்வாறமைந்தால் சிறுபான்மை இனத்தினரின் கதியென்ன? இரு இனங்களும் எண்ணிப்பார்க்கவேண்டிய ஒரு விடயமிது. தமிழர்களும் முஸ்லிம்களும் ஒருண்மையை உணரவேண்டும். ஜனநாயகம் என்ற ஓர் ஆட்சிமுறை இருக்கும்வரைதான் இவ்விரு இனங்களும் தனித்தனியே போராடியும் ஒருவரை மற்றொருவர் பலிகொடுத்தும் தத்தமது இனங்களுக்கெனச் சில நன்மைகளைப் பெறமுடியும். அவ்வாறுதான் இதுவரை அவர்கள் பெற்றுக்கொண்டனர்.

ஜனநாயக ஆட்சி அகலும்பட்சத்தில் அவர்களின் அந்த யுக்திகள் பலனளிக்கா. சர்வாதிகாரத்துக்குச் சார்ந்து நின்றால் தனிப்பட்டவர்கள் சில நன்மைகளைப் பெறலாம். ஆனால், சிறுபான்மையினர் சமூகவாரியனெ அபார நன்மைகளைப் பெறும் என்பது சந்தேகமே.

இந்த உண்மையை உணர்ந்துகொண்டு கடந்த சில வாரங்களாக தமிழ் முஸ்லிம் தலைவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தின முற்போக்குச் சக்திகளுடன் சேர்ந்து சம்பந்தன் தலைமையிலும் ஹக்கிம் தலைமையிலும் ஜனநாயகத்துக்காகக் கைகோர்த்து நின்றதையும் அவதானிக்கையில் வேறோர் உண்மை புலப்படவில்லையா?

அதாவது, இலங்கையின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பாரிய பொறுப்பை இறைநியதி அல்லது விதி சிறுபான்மையின் தலையிற் சுமத்தியுள்ளதென்பது தெளிவாகின்றதல்லவா? இந்த மகோன்னத நிலையை அவர்கள் சாமர்த்தியமாக உபயோகித்தால் வருங்காலச் சந்ததிகள் நன்றியுடன் அவர்களை நினைவுகூரும் என்பதிற் சந்தேகமில்லை. முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஹக்கிமும் அவரது சகாக்களும் இதுவரை நடந்துகொண்ட விதம் மெச்சத்தக்கதே. அதே போக்கினைத் தொடர்வார்களா என்பதே எனது கேள்வி.

இவற்றையெல்லாம் நோக்கும்போது தமிழர்களும் முஸ்லிம்களும் அரசியல் ரீதியாக ஐக்கியமாவது காலத்தின் கட்டாயமாகின்றது. தமது இனங்களின் நலனுக்காக மட்டுமல்ல நாட்டின் சபீட்சத்துக்காகவும் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகவும் இந்த ஐக்கியம் ஏற்படவேண்டியுள்ளது. அவ்வைக்கியம் இனப்பற்றைவிட தேசப்பற்றைப் பறைசாற்றுவதாக அமையவேண்டும். இதுவரை காலமும் இனப்பற்றை மையமாகவைத்தே இவ்விரு இனங்களின் அரசியற் கட்சிகளும் அவற்றின் அங்கத்தினர்களும் செயற்பட்டுவந்துள்ளனர். இதைக்கடந்து நாட்டுப்பற்றை மையமாகவைத்து இவர்கள் இணைந்து செயற்படும்போது அது பெரும்பான்மையினரின் முற்போக்குச் சக்திகளையும் நாட்டின் ஏனைய நலன்விரும்பிகளையும் கவராதா? அவ்வாறு கவரப்பட்டு எழுகின்ற செயற்பாடு சிறுபான்மை இனங்களின் இன்னல்களையும் தீர்த்துவைக்காதா?



கலாநிதி அமீர் அலி
(மேர்டொக் பல்கலைக்கழகம்,
மேற்கு அவுஸ்திரேலியா)

சென்றகாலக் குரோதங்களையும் குற்றங்களையும் பல்லவிகளாக இன்னும் பாடிக்கொண்டிருப்பதிற் பலனில்லை. அவற்றை மறக்க முடியாவிடினும் மன்னிக்க முடியுமல்லவா? உணர்ச்சியின் அடிப்படையில் பிரச்சினைகளை அணுகாமல், அறிவின் அடிப்படையில் அவற்றை அணுகினால் அது ஐக்கியத்துக்கு வழிவகுக்கும். அல்லது பிரிவினைவாதம் தொடரும்.

இப்போது உருவாகியுள்ள அரசியற் குழப்பம் சிறுபான்மை இனமிரண்டும் இணைந்து செயற்படவேண்டிய ஓர் ஒப்பற்ற சூழலைப் படைத்துள்ளது. இதனை நழுவவிட்டு விரயமாக்கினால், காலம் இவ்வினங்களை ஒருபோதும் மன்னிக்காது. பேரினவாதச் சர்வாதிகாரத்தினால் சிறுபான்மை இனங்கள் ஒடுக்கப்படுவது உறுதி.

தொடர்ச்சி...

# சுனாமியில் பிரிந்த மகளுக்கு ஒரு தாயின் கடிதம்..

நடந்தது...உன் அப்பாவை ஆயுத முனையில் ஒரு குழு கடத்திச் சென்றது... உனக்கு விளங்கும் அம்மா எப்படித் துடித்திருப்பேன் என்று... கள்ளனைப் பிடிப்பது போல் இரவில துப்பாக்கிகளோடு வந்து கடத்திக் கொண்டு போனார்கள். கள்ளர்கள் அனேகர் வெளியில் சுதந்திரமாகத் திரிய.. சமூகம்..சேவை அது இது என்று பாடுபட்ட உன் அப்பா கடத்தப் பட்டார்...

கருஞ்சுழிக்குள் நாம் அகப்பட்ட அன்று உன்னைத் தேடிப் பயமும் பதற்றமும்.. நடுக்கமுமாகக் கழிந்தது போலவே அப்பாவைத் தேடிய பதினொரு நாட்களும் அம்மாவுக்குக் கழிந்தது.. அப்பாவின் ஆதர்ச மனிதர்கள் உதவி செய்ய மறுத்தார்கள்... ஓடி ஒளித்தார்கள்...யார் யாரோ செய்த காரியங்களுக்காக அப்பா அடைக்கப்பட்டிருக்க..நம் வீட்டுக்கு வரவே பலர் பயந்தார்கள்..

பலரது முகமூடிகள் கிழிந்து, தொங்கி அவர்களது அவலட்சணமான முகங்கள் வெளியில் தெரிந்தன.. பல மாயப் பிம்பங்கள் தெறித்து விழுந்தன... ஒரு சர்வதேச தீவிரவாதக் கும்பலின் தலைவனது வீடு என்பதாகவும்..நம் தொலைபேசி பல முனைகளில் ஒட்டுக் கேட்கப்படுகிறதெனவும்.. நம் வீதியில் ஒற்றர்கள் அலைந்து திரிகின்றனரெனவும்.. கற்பனை செய்த படி அலைந்தனர் மனிதர்.. இவை எவை பற்றியும் கவலைப் பட நேரமற்று மீண்டுமொரு கருஞ்சுழிக்குள் அப்பா ஒரு முனையிலும் நானும் தம்பியும் மறு முனையிலுமாக.. சுழன்றபடியிருந்தோம்... எப்படி அப்பாவை அவர்கள் கடத்திய காட்சியை என்னால் மறக்க முடியாதோ..

'அவரில் ஒரு குற்றமுமில்லை..தவறுதலாகக் கொண்டு போய்விட்டோம்' என்று சொன்ன வாலிபனுடன் அவர் நம் வாசலில் நின்ற காட்சியையும் என்னால் மறக்க முடியாது.. அப்பா கடத்தப்பட்டிருந்த நாட்களில் இந்த மனிதர்கள் எத்தனை விதமான பேச்சுக்களைத்தான் பேசினார்கள்..எத்தனை ஊகங்கள்..எள்ளல்கள்..மறைமுகமான நையாண்டிகள்..எனக்கு வெறுத்து விட்டது.. எந்த சமூகத்துக்காக அவர் உழைத்தாரோ.. தன் சம்பளத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டாரோ..அதே சமூகமே தூற்றவும் செய்தது..

ஆனால் நாம் உதவாத. நம்மால் பயனடையாத.... முகந்தெரியாத பலர் எனக்கு உதவினார்கள்..போதும் ...இதற்கு மேல் எதையும் தாங்கும் சக்தி எங்களுக்கிருக்கவில்லையென உணர்ந்தேன்..மற்றவர்களுக்காக வாழ்ந்தது போதும் இனியாவது எங்களுக்காக வாழ்வோம் என முடிவெடுத்தேன்... ஏஞ்சல் குட்டியே..உன் மூச்சுக் காற்றுக் கலந்திருக்கும் மட்டக்களப்பை..உன் காலடி பதிந்த நம் வீட்டு முற்றத்தை..உன் ஸ்பரிசம்பட்ட உன் பொருட்களை...உன் ஞாபகங்களைச் சுமந்திருக்கும் நம் வீட்டை... உன்னை இன்னும் மறக்காமலிருக்கும் உன் சொந்தங்களை...உன்பிரிவால் வாடியிருக்கும் உன் தோழியரை...உன் உடலின் எச்சங்கள் மிஞ்சியிருக்கும் உன் கல்லறையை.. இன்னும்..இன்னும்..அனேக இனிய நினைவுகளை விட்டுப் பிரிந்து இப்போ அன்னிய மண்ணில் வாழ்கிறோம்..

சுனாமியில் பாதிக்கப்பட்டதாய்ப் பொய்ப் பத்திரங்கள் தயாரித்து வெளிநாடு போனவர்கள் அனேகர், உன்னை இழந்தும் கூட நாட்டை விட்டு வெளியேற முயலவில்லை..தற்காலிகமாகவேனும் நாட்டை விட்டுப் போவோம் என அப்பாவைச் சம்மதிக்க வைத்தேன்..அப்பா அடிக்கடி என்னிடம் சொல்வார் 2006 செடம்பர் 30 ம் திகதிக்குப் பின்னர் தன் வாழ்க்கை வேறு யாரோவால் தான் தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என..

மகளே உனக்குத் தெரியும் உன் அப்பா எப்படிக் கஷ்டப் பட்டுப் படித்தார் என்று.. வறுமையுடன் போராடிப் படித்த கதையை அவர் சொல்லும் போதெல்லாம் நீ அழுவாய்.. உனக்கும் அந்தக் கஷ்டங்கள் புரிந்தால் தான் மற்றவர்களுக்கு உதவுவாய் என அவர் நினைத்திருக்கலாம்..பல்கலைக்கழக விரிவுரையாளராக வேண்டுமென்ற இலட்சியத்துடன் வாழ்ந்ததால் சந்தோஷமாக அந்த வேலையைச் செய்தும் வந்தார்..தாம் தப்பிக்க வேண்டுமென்று அப்பாவை மாட்டி விட்டவர்கள் யாரென்றும்..பொறாமையால் கோள்மூட்டியவர்கள் எவர் என்றும்... எல்லோரையும் தெரியும்...ஆனால் இயேசு சிலுவையில் சொன்னது போல 'பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும்' என்றுதான் எங்களால் சொல்ல முடியும்..ஏனென்றால் நம் குணம் மன்னிப்பதும்..மறப்பதும் தானே..

மகள் நீ வாழ விரும்பிய தேசத்தில் நாங்கள் இப்போ இருக்கிறோம்...'அடுத்த ஏப்பிரல் விடுமுறைக்கு நீயும் அம்மாவும் லண்டன் வாருங்கள்' என்று உன் சித்தா உன்னிடம் சொல்லியிருந்தாள்..நீ அம்மாவை விட்டுப் பிரிய 2 கிழமைக்கு முதல் கெஞ்சும் குரலில் சித்தாவிடம்..

'சித்தா இந்த டிசம்பர் விடுமுறைக்கு லண்டன் வாறமே' என்று கேட்டாய்..உன் அந்தக் குரல் என் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.. நீ கேட்டபடி அந்த விடுமுறைக்கு இங்கு வந்திருந்தால் உன்னை இழந்திருக்க மாட்டோமோ என்று நினைப்பேன்.. இங்கு எதைப் பார்த்தாலும் உன் ஞாபகம் தான் வருகிறது...உனக்கு இது பிடிக்குமே..அது அழகாயிருக்குமே.. என நினைத்தபடி அலைவேன்...இப்போ நீ இருந்திருந்தால் 28 வயது...அம்மா எத்தனை பேருக்கு Key birthday cake செய்து கொடுத்திருக்கிறேன்.. உனக்கொன்றைச் செய்ய முடியவில்லையே...உனக்கு யாரிலாவது காதல் வந்திருக்கும்..உன் திருமணத்தைப் பற்றி அப்பாவும் நானும் நினைக்கத் தொடங்கியிருப்போம்.. மகளே எந்த நாட்டில் வாழ்ந்தாலும்.. எத்தனை ஆண்டுகள் சென்றாலும்..உன் நினைவில் தான் அம்மா வாழ்கிறேன்...உன் நினைவுகளின் சுமை தாங்க முடியாமல் போகும் நாட்களில் உன் கல்லறைக்கு வந்து மெழுகுவர்த்திகளையும்..மலர்களையும் வைத்து ஆறுவேன்..இங்கு என்ன செய்ய..???

என்றும் உன் நினைவுகளுடன் வாழும்
உன் அன்பு அம்மா,
பிரமிளா

# சம்பதனும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும்- இலங்கையில் இருவகையான ஜனநாயகம்?

இலங்கையில் ஐம்பது நாட்களாக நீடித்த அரசியல் நெருக்கடி உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனாலும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உருவாக்கப்பட்ட மைத்திரி- ரணில் அரசாங்கம் போன்று இது செயற்படுமா என்பது குறித்து இதுவரை சரியான முடிவுகள் இல்லை. ஒக்ரோபர் 26 ஆம் திகதி மகிந்த பிரதமராக நிமிக்கப்பட்டதும் அமைக்கப்பட்ட அமைச்சரவை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் செயலிழந்து, தற்போது மீண்டும் ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய அமைச்சரவையும் அமைக்கப்பட்டுள்ளது.





ஆனால் புதிய அமைச்சரவையில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மையப்படுத்தி ஐக்கிய மக்கள் சுநத்திரக் கூட்டமைப்பு அங்கம் வகிக்கவில்லை. இதனால் 2015 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நல்லாட்சி எனக் கூறப்படும் தேசிய அரசாங்கமாக இது இருக்காது என்பதையே புதிய அமைச்சரவை நியமனம் வெளிப்படுத்தியுள்ளது.

ஆனாலும் இன்னும் சில வாரங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியோடு முக்கிய அமைச்சுப் பொறுப்புகளை பெறக் கூடும் எனவும் கட்சித் தகவல்கள் கூறுகின்றன. எனினும் முரண்பாட்டில் ஒரு உடன்பாடாக மாத்திரமே இந்தப் புதிய அமைச்சரவையை நோக்க முடியும். மாறாக ஒக்ரோபர் 26 ஆம் திகதிக்கு முன்னரான அரசாங்கமாக இதனைக் கருத முடியாது. இந்த இடத்தில் தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சித்தலைவர்

ரணில் பிரமராகப் பதவியேற்றதும் இதுவரையும் பிரதமராகப் பதவி வகித்து சர்சையை ஏற்படுத்திய மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது. அதற்கமைவாக சபாநாயகர் கரு ஜயசூரியவும் மகிந்த ராஜபக்சவே எதிர்க்கட்சித் தலைவர் என கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் அறிவித்துமுள்ளார்.

ஆனால் அதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏற்கவில்லை. இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள் இருப்பதாக சம்பந்தன் புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

அரசியல் நெருக்கடி உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் முடிவடைவதற்கு சுமந்திரன், கனக ஈஸ்வரன் போன்ற சட்டத்தரணிகளே காரணம் என சிங்களப் பெரும்பான்மை கட்சிகளே கூறியுள்ளன. மகிந்த ராஜபக்ச தரப்பு சுமந்திரன் மீது கடுமையாகக் குற்றம் சுமத்தியுமுள்ளது. இந்த நிலையில் ரணில் பிரதமராகப் பதவியேற்றதும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்திலும் எதிர்க்கட்சியிலும் இருப்பதால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோர முடியாதென சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேனே ஜனாதிபதியாக இருக்கும் நிலையில் அந்தக் கட்சியைச் சேர்ந்த மற்றுமொரு மூத்த உறுப்பினர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்க முடியாது. நாடாளுமன்ற நிலையியல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவ்வாறு பதவிவகிக்க முடியாது எனத் தெரிந்தும், சபாநாயகர் கரு ஜயசூரிய. மகிந்த ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலைவராக அறிவித்ததன் நோக்கம் என்ன என்பது குறித்து தமிழ்த் தரப்பிடம் கேள்விகள் எழுந்துள்ளன.

உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாக சட்டத்தரணி சுமந்திரன் எச்சரிக்கைவேறு விடுத்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவரின் பதவி விவகாரம் குறித்து ஐக்கியதேசியக் கட்சி விசனத்தை வெளியிட்டாலும் ரணில் விக்கிரமசிங்க இதுவரை வெளிப்படையாகக் கருத்துக் கூறவில்லை. மகிந்த எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதில் சட்டப் பிரச்சினை உண்டு என்று தெரிந்தும் ரணில் விக்கிரமசிங்க அமைதியாகவே உள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது இலங்கை அரசியல் யாப்பின் பிரகாரம் மூன்றாவது அதிகாரம் உள்ள பதவி. ஜனாதிபதி, பிரதமர் ஆகிய பதவிகளுக்கு அடுத்ததாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி இருப்பதனால் மகிந்த ராஜபக்ச அந்தப் பதவியை வகிக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் தினேஸ் குணர்த்தன கூறுகின்றார்.

அதேவேளை, 2015 ஆம் ஆண்டில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த சம்பந்தன், தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு விடயத்தில் எந்த வகையில் செயலாற்ற முடிந்தது என்பது இங்கு கேள்வி. ஆனாலும் புதிய அரசியல் யாப்புக்கான நகல் யோசனைகள் தயாரிக்கப்பட்ட விவகாரத்தில் சம்பந்தனுக்கு முக்கிய பங்கு உள்ளது.

இருந்தாலும் மூன்றில் இரண்டு

நி. அமிர்தசன்

பெரும்பான்மைப் பலத்தை பெறுவதற்கு இந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி பயன்பட்டபோதில்லை என்பது தெளிவு. குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவுக்காக ஜனநாயகம் பேசியபோது விரும்பியோ விரும்பாமலே சம்பந்தனுடன் கைகோர்த்த ஜேவி.பி, ரணில் பிரதமராகப் பதவியேற்றதும் புதிய அரசியல் யாப்பு நாட்டைப் பிளவுபடுத்தும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையிலேதான் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக சம்பந்தன் மகிந்தவுடன் மோதுப்படுகின்றார். சம்பந்தனின் இந்த ஜனநாயக மோதலுக்கு ஐக்கியதேசியக் கட்சியும் ஜே.வி.பியும் கூறப் போகும் நேர்மையான பதில் என்ன? இலங்கையில் ஜனநாயகம் இரண்டு வகையானதோ என்ற கேள்விதான் தற்போது விஞ்சி நிற்கின்றது.

## மரண அறிவித்தல்

பிறப்பு
14 * 08 * 1951



இறப்பு
16 * 12 * 2018

கலுவாஞ்சிகுடியைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட,

### திரு. குருசாமி புகழேந்திரன்

அவர்கள் 16.12.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசாமி, கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், நிர்மலாதேவி அவர்களின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான அம்பலவன், தேசம்மா தம்பதியினரின் மருமகனும், பிரசன்னா, சிந்துஜன், மயூரன், அபிராம் ஆகியோரின் அன்பு தந்தையும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, இரத்தினஜயா, விஸ்வநாதன், கோவிந்தநேரு, இராஜேஸ்வரி, கோவிந்தசாமி மற்றும் ஆனந்தநேரு, அருளாம்பிகை ஆகியோரின் சகோதரனும், தவராஜசிங்கம், புவனேந்திரன் காலஞ்சென்றவர்களான சந்திரிகாதேவி, கோமளாதேவி மற்றும் சாந்தினிதேவி, நந்தினிதேவி, தெய்வநாயகி, இராசமணி, சௌந்தரம்மா, தம்பிரெட்னம், காலஞ்சென்ற குருகுலசிங்கம் மற்றும் அரசகேசரி, இராசவதி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற யுவராஜன், உதயகுமார், கௌரி, கலைசனா, கணேசமூர்த்தி, குணராசா, அருள்ராசா, ஒப்பிலாமணி, தேவி, காந்தன், கிருபையம்மா, சதாசிவம், சண்முகராசா, தயாநிதி, சலாக்கியநிதி, தேவராசா, ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், அருளானந்தராஜா, அரன்காந்தன், சுகந்தி, சாந்தி, காலஞ்சென்றவர்களான ரமணன், பாஸ்கரன் மற்றும் பாஸ்கரி, விஜயசாகரன், நிசாகரன், கவிதா, லலிதா, கிருத்திகா, அகிலன், அருள்ராஜா, பானுமதி, பானுஸ்கந்தா, நவநீதா ஆகியோரின் அன்பு மாமனாரும், கோமளாதேவி, சத்தியமூர்த்தி, சிவானந்தேவி, ராஜ்குமார், சுரேஷ்குமார், நிரஞ்சன், நிலாந்தினி, காலஞ்சென்றவர்களான சதாநாதன், சபாநாதன், சிவநாதன் மற்றும் சுதாநாதன், சுபாநாதன், புஸ்பவேணி, ரஜீபன், பிரியா, லக்ஷி, மயூரன் ஆகியோரின் சிறிய தந்தையாரும், சியாஜு, காலஞ்சென்ற அஜிதன், ஆர்த்தி, அபர்ணா ஆகியோரின் பெரிய தந்தையாரும், அர்சனா, அக்சயா, ஆதிஸ் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (2018.12.17)ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் மட்டக்களப்பிலிருந்து எடுத்து செல்லப்பட்டு கலுவாஞ்சிகுடி பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.17/17, நிசவீரசிங்கம் வீதி,
1ம் குறுக்கு,
மட்டக்களப்பு.

தகவல்
- குடும்பத்தினர்-
தொடர்பு :- 0723179586

## விளம்பரம்



# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## காட்டு மிருகங்களால் அச்சத்தில் இடம்பெயர நினைக்கும் மக்கள்!

### கறுவாச்சோலைக்கு நேர்ந்த அவலம் ஏனைய படுவான்கரைக் கிராமங்களுக்கும் ஏற்பட்டுவிடுமோ?

'பிறந்து விட்டோம் உயிர் உடலோடு இருக்கும் வரை மனித வேடத்தோடு வாழ்ந்துதான் ஆகவேண்டும். அதுவரை வயிற்றை பாழ்போட முடியாது. இதற்காக பணம் வேண்டும். பணம் வீட்டிலே காய்க்கும் மரமல்ல. மற்றவர்களால் தரப்படும் ஊதியம். இதைப்பெற உடம்பை வருத்தி, உழைக்க வேண்டும். அதற்காக கதிரையில் இருந்து எல்லோரும் மேசையில் எழுத முடியாது. பல தொழில்களையும் செய்ய வேண்டும்' இது கணேசமூர்த்தி விக்னேஸ்வரனிடம் கூறியது.

பெருவட்டையில், மாடு மேய்க்கும் போது, இருவரும் பேசிக்கொண்டனர். படுவான்கரைப்பகுதியில் உள்ள மக்கள் பெரும்பான்மையினர்கள் விவசாயத்தினையும், கால்நடை வளர்ப்பினையும், கூலிவேலை செய்துமே வாழ்க்கையினை வழிநடத்துகின்றனர். இத்தொழில்களும் வீட்டில் இருந்து செய்வதில்லை. காடுகளை அண்டிய பகுதிகளிலே இப்பகுதி மக்கள் விவசாயத்தினை மேற்கொள்கின்றனர். அதேபோன்று கால்நடை வளர்ப்பை பொறுத்தவரை, அதிகமானவர்கள் மாடுகளை மேய்ப்பதானால் மேய்ச்சல் தரைகள் காடுகளை அண்டிய பகுதிகளிலே அமைந்துள்ளன. இதனால் வனஜீவராசிகளின் தாக்குதல்களுக்கும் உள்ளாகி வருகின்றனர். மட்டக்களப்பு



மாவட்டத்தின் வெல்லாவெளி, வாகரை, பட்டிப்பளை, வவுணதீவு, செங்கலடி பிரதேச செயலாளர் பகுதிகளைச் சேர்ந்த மக்களே இப்பாதிப்புக்குள் அதிகம் உள்ளாகின்றனர். வனஜீவராசிகளுள்ளும் யானை தாக்குதலுக்கே மக்கள் அதிகம் உள்ளாவதுடன், பயிர்கள் அழிக்கப்பட்டு வருகின்றமையும் நடந்தேறி வருகின்றது.

வேளாண்மையிலும், மேட்டுநிலப் பயிர்ச்செய்கைகளிலும் தற்போது விவசாயிகள் ஈடுபட்டுள்ளதுடன், அறுவடைக்காலமும் நெருங்கி வருகின்றது. இதனால் யானைகளின் நெருக்கடியும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. பயிர்களை உண்பதற்காக யானைகளும் விவசாய நிலங்களில் ஊடுருவுகின்றன. யானைகளை துரத்துவதற்காக விவசாயிகளும் இரவுமுழுவதும் கண்விழித்து காத்திருக்கின்றனர். யானையை மனிதர்கள் துரத்தும் அதேவேளை யானை மனிதர்களையும் துரத்தவும் செய்கின்றது. இத்தோடு நிறுத்தவில்லை. குடிசைகளில், பொரைகளில் இருப்பவர்களையும் யானை தாக்கி வருவதுடன், பொரையையும், வீடுகளையும் யானை அழித்து வருகின்றது. இதனால் மனித உயிர்ப்பலிகளும் இடம்பெற்றுள்ளன. இதனால் மக்கள் மிகுந்த அச்ச நிலையுடனே வாழ்கின்றனர். கிராமங்களுக்குள்ளும் யானை புகுந்து அட்டகாசம் செய்கின்றது. வீதியோரங்களிலும் நின்று வீதியால் செல்பவர்களையும் தாக்குகின்றது. பாடசாலைகளையும் விட்டு வைக்கவில்லை; அவற்றினையும் தாக்கித்தான் தீருகின்றது. இதனால் வீட்டிலே உள்ள பிள்ளைகளும்,

**படுவான் பாலகன்**

பெற்றோர்களும் பகல் நேரம் முழுவதும் தத்தமது கடமைகளை நிறைவேற்றி இரவிலே தூங்க முடியாதவர்களாக கண்விழித்திருக்கின்றனர். உயிரை பறிகொடுத்துவிடுவோமோ, விட்டமோ என்றுகூடத்தெரியாத அச்ச நிலையே இவர்கள் மனதில் குடிகொண்டுள்ளது.

இச்செயற்பாடு ஒருநாளோடு முடிந்தாகவில்லை. ஒவ்வொரு நாளும் தொடர்கின்றது. இதன் காரணமாக வாழ்க்கைப் பிடிப்பற்றவர்களாக வாழ்வதோடு, உயிர்வாழ உழைக்கும் இவர்களும், உயிரை பறிகொடுக்கும் நிலையின்றி மனவிரக்தியும் கொண்டுள்ளனர். கிராமத்திற்குள் யானையின் ஊடுருவலும், இந்தக் கிராமத்தில் இவ்வாறு எப்படி வாழ்வது என்ற மன உணர்வினையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

காடுகளை அண்டி வாழ்ந்தாலும், காடுகளுக்குள் மக்கள் வாழவில்லை. படுவான்கரைப்பிரதேசத்திலே இடம்பெறுகின்ற யானையின் தாக்குதல் தொடர்பில் மக்களும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மட்டத்திலும் சுட்டிக்காட்டி வருகின்றனர். மனித உயிர்ப்பலி என்பது ஒரு குடும்பத்தில் ஒருவரை மட்டும் யானை பலி எடுக்கவில்லை. குடும்பத்தினையே ஒட்டுமொத்தமாகப் பலியெடுத்த தருணமும் உண்டு. இதற்காக மக்கள் வீதிக்கு இறங்கி, அரச நிர்வாக பிரதேச செயலகங்களின் முன்னால் ஆர்ப்பாட்டங்களை செய்தமையும், செய்து கொண்டிருக்கின்றமையும் முடிந்தாகவில்லை. இத்தனைக்கும் அரசு தீர்வு பெற்றுக்கொடுப்பதாக கூறியது. அதேபோன்று அதற்காக சில செயற்பாடுகளை முன்னெடுத்தனர். அவை முற்றுமுழுதாக பயனளிக்கவில்லை. குறிப்பாக மனித குடியிருப்புகளுக்கு வெளியே யானை மின்வேலிகளை அமைத்தனர். இதனால் யானை ஊடுருவலை தடுக்கலாமென்பது அரசின் எண்ணமாகவிருந்தது. அது நிறைவேறவில்லை. யானை, மின் வேலியையும் கடந்து ஊருக்குள் ஊடுருவி இருக்கின்றது. மக்கள் உயிர்களும் ஊசலாட தொடங்கியிருக்கின்றன. என தனது மனதில்பட்ட அனைத்தையும் கணேசமூர்த்தி கொட்டித் தீர் தான்.

பின்னர் விக்னேஸ்வரன் ஆரம்பித்தான், மின்வேலி அமைத்தும் முற்றுமுழுதான பலன் கிடைக்கவில்லையென்பது அரசுக்கு தெரியும். மக்களும் அடிக்கடி கூறிவருகின்றனர். இந்நிலையில் இதற்கு நிரந்தர தீர்வு என்ன? இதற்கு தீர்வென்பது வழங்கபடமாட்டதா? என்று வினா எழுப்பியவனாக, நவீன உலகிலே நாளுக்கு நாள் எத்தனையோ கண்டுபிடிப்புக்களும், தொழில்நுட்ப வளர்ச்சியும் இடம்பெற்றுவருகின்ற நிலையில், இதற்கான தீர்வொன்றினை காணாமல் இருப்பது வேதனையான விடயமே. வாழ்வாதாரத்திற்காகவும், உயிர்வாழ்வதற்காகவும் தாம் பிறந்த கிராமங்களிலே மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என நினைக்கும் மக்கள் நாளாந்தம் மனக்கவலையுடனும், இடம்பெயரவேண்டும் என நினைத்திருக்கின்ற மன உணர்வின்பால் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் இருந்த கறுவாச்சோலை கிராமம் இன்று இல்லாமல் போயிருப்பதுபோன்று இன்னும் பல கிராமங்கள் இல்லாமல்போகலாம். இதற்காக மக்கள் நலன்வேண்டி சேவை செய்பவர்கள் மக்களின் துயர்துடைக்க முன்வரவேண்டுமென கூறிய விக்னேஸ்வரன் சூரியனும் மேற்கு நோக்கியவாறு கீழ்இறங்க தானும் அவ்விடத்தினைவிட்டு அகன்றான்.

## உன்னைப்போல் பிறரையும் நேசி

மனிதனைப் புனிதனாக்கிட புனிதனாம் இறைவன் மனிதனாகப் பிறந்தார். இயேசு என்னும் பெயரினைப் பெற்றார்.



மனித என்பும் தோலும் போர்த்து, மனித வேடம் பூண்டு இறைவன் மனித அவதாரம் எடுத்ததால் மனித இனம் மாண்பு பெற்றது என வேத விற்பன்னர்கள் விளம்பலானார்கள்.

வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் குகையில் பிறந்தான். வரலாற்றைப் படைத்தவருக்கு கிடைத்ததோ ஆடு, மாடுகளின் தொழுவமான குகையே. பிற்காலத்தில் மிருகத்தனமாக மிருகத்தைப்போல் மனிதர்களால் அடித்துக் கொலை செய்யப்பட இருந்தவர் மிருகங்களின் தலத்திலேயே அவதரித்தார். பல நூற்றாண்டுகளுக்கு முன் யூதர்கள் காளையையும் கிரேக்கர்கள் கழுதையையும் கும்பிட்டு வந்தார்கள்.

இவ்வாறு வணக்கத்துக் குரியதாயிருந்த மிருகங்கள் தலை சாய்த்து வணங்கி நிற்கத்தக்கதாக மனுவேந்தர் முகிழ்ந்தார். நரிகளுக்குக் குழிகளும் ஆகாயப் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு. மனித குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை எனக் கூறவந்தவர், தான் பிறப்பதற்கு இடம் கிடையாத பரிதாப நிலைக்குள்ளாகி மாட்டுத்தொழுவத்தில் பிறந்தார்.

எளிய நிலையிலுள்ள இடையர்களும் தத்துவஞானிகளான அரசர்களும் சந்திக்கும்படி பிறந்தார். தொழுவமும் சிலுவையும் அவரின் மண்ணுலக வாழ்க்கையின் தொடக்கமும் முடிவுமாயிருந்தன. பூவுலகில் பிறக்கும் போது ஒதுக்கப்பட்டவர் பூவுலகை விட்டுப் பிரியும் போது வெறுக்கப்பட்டார்.

வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என தன் சத்திய வார்த்தைகளின் நித்தியத்துவத்தை வலியுறுத்தினார். அதே நேரத்தில் வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை வெளிக்குவராத மறைபொருளுமில்லை (உண்மை ஒருநாள் வெளியாகும்) என உண்மையின் தன்மையை சுருக்கமாகக் கூறினார்.

மேலும் 'நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கு அளக்கப்படும்' எனத் தெய்வநீதியை விளக்கினார். தீர்க்கதரிசி ஒருவனும் தன்னூரிலே அங்கிகரிக்கப்பட மாட்டான் எனச் சொன்னார். அதற்கு அவரது வரலாறே எடுத்துக்காட்டாக அமைந்தது. அவருடைய வார்த்தைகளெல்லாம் உன்னைப்போல் பிறரையும் நேசி என்ற வசனத்தை மையமாக வைத்துச் சொல்லப்பட்டவையாகும்.

அவரைக் கொல்லச் சிலுவையில் நிறுத்தி ஆணி அறைந்த கொடியவரிடத்தும் அன்பு காட்டி "பிதாவே இவர்களை மன்னியும்" தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்" என்று உயிர்விட்டார். அன்புள்ள இடத்தில்

**கலாபூசணம் அரங்கம்**
**இரா.தவராஜா**

தியாகமிருப்பது இயல்பு. தியாகமில்லாத இடத்தில் அன்பிருத்தல் அரிது.

கிறிஸ்து அன்பு – அன்பின் முழுமை, அன்பே அவர், அவரே அன்பு. எனவேதான் அயலவனிடமும் அன்பு கூறுங்கள் என்றார். அன்பை அவர் போதித்தார், அன்பைச் சாதனையிலும் காட்டினார்.

மனித அன்பும் இரக்கமும் இயேசுபிரான் போதித்தபடி கைக்கொள்ளாத காரணத்தினால்த்தான் இன்று இத்தனை இடர்பாடுகளும் வேதனைகளும். மனிதன் மனிதனாக வாழ மனித இதயங்களில் மனிதநேயம் பெருக வேண்டும். மனிதனை மனிதன் மதிக்கும் காலம் வரவேண்டும். மனிதம் தழைக்க வேண்டும்.

# சுனாமியில் பிரிந்த மகளுக்கு ஒரு தாயின் கடிதம்..



செல்ல மழையும் நீ ..சின்ன இடியும் நீ.
என் அன்பான செல்ல மகள்,

நீ எப்படி இருக்கிறாய் உன் இருப்புப் பற்றி அறிய ஆவலாக இருக்கிறேன். அம்மாவையும், அப்பாவையும் விட்டுப் பிரிந்து நீ நீண்ட பயணம் சென்று பதினாலுவருடங்களாகி விட்டது...

ஒரு நாள் உன்னை விட்டுப் பிரிந்திருக்க நேரிட்டாலே எத்தனை தொலைபேசி அழைப்புக்கள்..விசாரிப்புக்கள்..எவ்வளவு வேகமாகப் போய் விட்டது பதினாலு வருடங்களும் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் எனக்குத் தான் தெரியும் பதினாலு வருடங்களும் பதினாலு யுகங்களைக் கடந்த அலுப்பும் ஆயாசமாகவும் கழிந்தது என்று. உன் நினைவின்றி ஒரு கணமேனும் கழியவில்லை. உன்னிடம் சொல்ல எவ்வளவோ இருக்கிறது மகளே...நீ வளர்ந்து வருகிற நாட்களில் எனக்கு மகளாக இருந்ததை விட..ஒரு நல்ல சினேகிதியாய் இருந்தாய்..என் எல்லாவற்றையும் உன்னிடம் சொல்லுவேன்..பொறுமையாய்க் கேட்டு ஆலோசனை சொல்வாய். இப்போதும் அம்மா இங்கு நடக்கும் எல்லாவற்றையும் உன்னிடம் மானசீகமாகச் சொல்கிறேன்.. காற்றில் கலந்து வரும் பெருமூச்சொலிக்குள் புதைந்திருக்கும் என் மனதைப் படிக்கும் ஆற்றல் உனக்கிருக்கும் என்றே நம்புகிறேன்...

பேராசிரியர் வ.ஆறுமுகத்தின் 'கருஞ்சுழி' நாடகத்தை அப்பா தயாரிக்கும் போது அந்த வசனங்கள் நமக்கும் மனப் பாடமாயின..நாம் சிக்கியதும் அதைப் போன்றதொரு கருஞ்சுழிக்குள் தான்.. ஆனால் அதற்குச் 'சுனாமி' என்று செல்லப் பெயரிட்டு அழைக்கும் போது எனக்கு எரிச்சல் எரிச்சலாக வரும்..கருஞ்சுழி நாடகத்தில் 'கருஞ்சுழி..அண்டங்களை விழுங்கி..ஆகாயத்தையே விழுங்கி... இப்போது பூமியை'..என்றும்..'இது ஒயவே ஓயாதா..எல்லோரையும் அழித்து விட்டுத் தான் ஓயும்..' என்றெல்லாம் வசனங்கள் வரும். அந்த நாடகத்தில் வரும் பிரளயம்.. தப்பித்தலுக்கான போராட்டம், எல்லாமே நம் வாழ்வில் நிஜமாகவே அரங்கேறிய கொடுமையைத் தான் என்னால் தாங்க முடியவில்லை…அந்தக் கருஞ்சுழி நம் வாழ்வையும் சிதைத்துச் சின்னா பின்னமாக்கியிருக்கிறது..வாழ்தலுக்கான.. தப்பித்தலுக்கான போராட்டத்தில் நீ தோற்றுப் போக நான் வென்றேன்.. ஆனால் முதல் முறையாக சந்தோஷிக்க முடியாத வெற்றி..

மகளே நீ இல்லாத இந்த பதினாலு வருடங்களில் என்னென்னவோவெல்லாம் நடந்து விட்டன...நீ என்னிடம் எப்போதும் ஒரு தம்பி பெற்றுத்தா எனக் கேட்டு அடம் பிடிப்பாய்..நீ இருக்கும் போது நாங்கள் விரும்பியும் கிடைக்காத அந்தத் தம்பி இப்போ எங்களிடம் இருக்கிறான்...ஆனால் அவனைக் கொஞ்சவும்..விளையாடவும்.. சீராட்டவும் நீதான் இல்லை. குழந்தையாய் நீ இருந்த போது எப்படி இருந்தாயோ அப்படியே அவனும் இருக்கிறான்.. அவனது சின்ன வாய் திறந்து சிரிக்கும் போது நீ சிரிப்பது போலவே இருக்கிறது.. உனது சின்ன நாடியும்..உதடுகளும் அவனுக்கு அப்படியே வந்திருக்கிறது... அவனை வயிற்றில் சுமந்திருந்த நாட்களில் நான் மிகவும் சுகயீனமுற்றிருந்தேன்.. கண்ணீரே எனக்கு உணவாக இருந்தது.. அதனால் அவன் குறித்த காலத்துக்கு முன்பே.. மிகவும் எடை குறைந்தவனாகவே பிறந்தான்...அவன் பிறந்த பின்பும் அம்மா கடுமையாக சுகயீனப் பட்டேன், 3 ம் நாள் தான், ஸ்ரீ ஜெயவர்த்தன புர சிறுவர் அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்த அவனைப் பார்க்க என்னை அழைத்துச் சென்றார்கள்.. ஒன்றரைக் கிலோ எடையுடன், முகத்தில் கண்கள் மட்டும் பிரகாசமாய்த் தெரிய.. என்னையே குறு குறு வெனப் பார்த்தான்.. அவனது பார்வையில் 'அம்மா அக்காவைப் பற்றிக் கவலைப் பட்டு..யோசித்து..அழுது.. என்னை முழுமையாக வளர விடாமல் செய்து விட்டீர்களே'என்ற கேள்வியும் குற்றச் சாட்டும் தெரிந்தது.. மகள் இப்போ உன் தம்பி மிக ஆரோக்கியமாக வளர்ந்து வருகிறான்.. அப்பா உன் பெயரையும் இணைத்து அவனுக்கு 'அனாமிர்தன்'என்றே பெயரிடிருக்கிறார். என் அன்பு மகளே.. அவனைப் பார்க்கும் போது கால யந்திரத்தில் வருடங்கள் பின்னோக்கிப் பயணம் செய்தது போலவும்..நீதான் சிறுமியாய் இருக்கிறாய் என்பது போலவும் இருக்கிறது.. ஒவ்வொரு நிமிடமும் உன்னை ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறான் உன் தம்பி..

மகளே இதை விட எவ்வளவோ விடயங்கள் நடந்திருந்தாலும்.. உன்னால் தாங்க முடியாத சில விடயங்களும் நடந்துதானிருக்கின்றன.. நீ விரும்பிப் போகும் உன் அப்பாவின் ஊரும், அதைச் சூழவுள்ள கிராமங்களும், 2006 ல் மக்கள் இல்லாத மயான பூமியாகி. உன் அப்பாவின் ஊரில் உன் சொந்தங்கள். ஷெல் அங்கு மழையாகப் பொழிந்ததாம்.. தம் வீடுகளை விட்டு முதலில் பாடசாலைகள் கோயில்களில் ஒதுங்கினார்களாம்.. பின் பதுங்கு குழிகளில்..பின் கொஞ்சம் தள்ளிக் காடுகளில்...அதன் பிறகு பக்கத்துக் கிராமங்களில்..வெருகலில் ..வாகரையில்.. என்று ஏராளமான இடங்களில் மாறி மாறி.. சிதறடிக்கப்பட்டு... அங்குமிங்கும்..அகதிகள் என்ற முத்திரையோடு.. மரங்களுக்குக் கீழும்..அகதி முகாம்களிலும்..நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும். தங்கியிக்க... உன் பூட்டியாச்சி உட்பட இன்னும் பலர் நம் மட்டக்களப்பு வீட்டில்..உடுத்திய உடையுடன்..உயிரைக் கையில் பிடித்தபடி.. தம் வீடுகள்..சொத்துக்கள்..உடமைகள்..இனிய நினைவுகளை உள்ளடக்கிய நம் பாரம்பரிய பூமி..எல்லாவற்றையும் இழந்தவர்களாக நடைப் பிணங்களாக வாழ்ந்து 2009ல் மீண்டும் ஊருக்கு சென்று வாழ்கிறார்கள். நீ நேசித்த பூட்டியாச்சி 2014ல் இவ்வுலகு நீத்தார் சின்ன அப்பப்பாவும் இந்த ஆண்டு எம்மை விட்டு போய் விட்டார் எங்களுக்குத்தான் எதுவும் கொடுத்து வைக்கவில்லை.

மகளே..2006 செப்டம்பர் 30 ம் திகதி உன்னால் தாங்க முடியாத இன்னோரு சம்பவமும்

**அன்பு அம்மா, பிரமிளா**

---

# வெற்றியின் முதலடி அதிகாலையில் எழும்புதல்



அதிகாலையில் எழும்புவதற்கும் வெற்றி பெறுவதற்கும் என்ன சம்ந்தம் என்று நீங்கள் யோசிப்பீர்கள். சம்மந்தம் இருக்கிறது. வாழ்க்கையில் வெற்றியின் உச்சத்தை அடைந்தவர்கள் அனைவரும் அதிகாலையில் எழும்பும் பழக்கமுடையவர்கள். உலகின் தலைசிறந்த விஞ்ஞானியான பெஞ்சமின் பிராங்கிளின் 'அதிகாலையின் வாயில் தங்கம் இருக்கிறது' என்றார்.

நேரம் என்பது நம் எல்லோருக்கும் பொதுவான ஒன்று. அதிகாலையில் எழும்பும் பழக்கமுடையவர்கள் ஒரு நாளில் அதிகமான வேலையைச் செய்கிறார்கள். அதிகாலையில் எழும்புவது என்பதுதான் அன்றைய நாளின் வெற்றி தோல்வியை தீர்மானிக்கிறது. வாழ்க்கையில் வெற்றி பெற்ற மனிதர்களுக்கும் வாழ்க்கையை சாதாரணமாக வாழும் மனிதர்களுக்கும் இடையில் உள்ள ஒரே வித்தியாசம் அதிகாலையில் எழும்பும் பழக்கம்தான்.
நாம் ஒரு ஓட்டப்பந்தயத்தை சரியான நேரத்தில் ஓடி முடிக்க வேண்டும் என்றால் அதன் தொடக்க நேரமும் வேகமும் சரியாக இருக்க வேண்டும். அது போல்தான் வாழ்க்கையும். அதிகாலையில் எழும்புவதுதான் அந்த நாளிற்கான சரியான தொடக்கம். அப்போது தான் அந்த நாள் உங்களுக்கு வெற்றிகரமானதாக இருக்கும்.

### அதிகாலை நேரம் என்பது எது?

நம்மில் பலர் அதிகாலை நேரம் என்பது எது என்றே தெரியாமலே ஓடிக்கொண்டிருக்கிறோம். பொதுவாக ஒரு வார்த்தை நாம் கேள்விப்பட்டிருப்போம் 'பிரம்ம முகூர்த்தம்' என்று. அப்படி என்றால் என்ன? சூரியன் உதிப்பதற்கு முன்னால் இருக்கும் ஒரு மணித்தியாலமும் முப்பது நிமிடமும் தான் பிரம்ம முகூர்த்தம் எனப்படும். அந்த நேரத்தை மதங்கள் புனித நேரம் என்கின்றன. அது கடவுளுக்கான நேரம், அந்த நேரத்தில் நாம் நாளைத் தொடங்குவது அந்த நாளின் வெற்றிக்கு வழியமைக்கும். நீங்கள் குறைந்தது அதிகாலை ஐந்து மணிக்காவது எழுந்திருக்க வேண்டும். இன்று புகழின் உச்சத்தில் இருக்கும் மனிதர்களின் வெற்றியின் காரணம் அவர்கள் அதிகாலை 4.00 மணிக்கு எழும்புவது தான் என்கிறார்கள். உதாரணத்திற்கு ஒருவரை கூறுகிறேன், Apple நிறுவனத்தின் CEO Tim cook அவர்கள் அதிகாலை 3.45 மணிக்கு எழும்புகிறார், 5.00 மணிக்கு உடற்பயிற்ச்சி செய்கிறார். தன்னுடைய வெற்றிக்கு காரணம் என்று அவர் இதைத்தான் கூறுகிறார்.

### அதிகாலையில் எழும்புவது எப்படி?

குறைவான நேரம் தூங்கினால் அதிகாலையில் எழும்ப முடியாது. அதேபோல் அதிக நேரம் தூங்கினாலும் எழும்புவது மிக கடினம். ஒருவித சோம்பலாக இருக்கும். எந்த வேலையையும் சரியாக செய்ய முடியாது.
முதலில் உங்களுக்கு எத்தனை மணித்தியாலம் தூங்க வேண்டும் என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் தூங்கும் நேரத்தின் அளவு என்பது ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.

நம்மில் பலர் கூறுவார்கள் ' எனக்கு காலையில் எழும்புவது சரி வராது நான் எனது வேலைகள் எல்லாவற்றையும் இரவே முடித்து விடுவேன்' என்று. அது தவறு. இரவில் சரியான நேரத்திற்கு தூங்க வேண்டும்.

### அதிகாலையில் எழும்ப இரண்டு வழிகள் சொல்கிறேன்.

1. இரவில் தூங்கச் செல்லும் முன் அதிகாலை எழுந்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தை உருவாக்கி விட்டு தூங்குங்கள். அதாவது நாளை முடித்திருக்க வேண்டிய வேலை என்று சில வேலைகள் இருக்கும். அவற்றை இரவே செய்து விடாமல் அதிகாலையில் எழுந்து செய்து முடியுங்கள்.

2. நீங்கள் அலாரம் வைக்கும் கடிகாரமோ இல்லை கைத்தொலைபேசியோ அதை உங்கள் படுக்கைக்கு சற்று தள்ளியே வையுங்கள். அதாவது கைக்கு எட்டாத தூரத்தில்.

அது ஏன் என்றால் எழுந்து சென்று கடிகாரத்தை அணைக்கும் அந்த நேரத்தில் நமது தூக்கம் கலைந்து விட அதிக வாய்ப்புள்ளது. எந்த ஒரு விடயத்தையும் மூன்று மாதங்கள் தொடர்ந்து செய்து விட்டீர்கள் என்றால் பிறகு அதுவே உங்கள் வழக்கமாகி விடும்.

### அதிகாலையில் எழுந்து என்ன செய்வது?

அதிகாலையில் எழுந்தவுடன் என்ன செய்ய வேண்டும் என்று கூறும் முன்பு என்ன செய்ய கூடாது என்று கூறுகிறேன். காலையில் எழுந்ததும் தயவு செய்து உங்கள் கைபேசியை மட்டும் தொடாதீர்கள். இன்று நாம் அனைவரும் காலையில் எழுந்தவுடன் செய்யும் முதல் வேலை சமூக வலைத்தளங்களை பார்வையிடுவது. Facebook what's app இவற்றை பார்த்து நேரத்தை வீணடிக்கின்றோம். குறைந்தது ஒரு மணி நேரமாவது கைபேசியைத் தொடாதீர்கள். காலையில் எழுந்ததும் உடற்பயிற்சி அல்லது யோகா பயிற்சி செய்யுங்கள். அப்படி இல்லையென்றால் ஒரு அரை மணி நேரம் நடவுங்கள் அதுவே புத்துணர்ச்சி தரும் அந்த நாளை வெற்றிகரமாக தொடங்க.

கொஞ்ச நேரம் எதையாவது படியுங்கள் அல்லது நல்ல இசையை கேளுங்கள். முக்கியமாக இறை வழிபாட்டில் ஈடுபடுங்கள். அது மன நிம்மதியையும் உடல் புத்துணர்ச்சியையும் தரும். அன்றைய நாளில் நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளை திட்டமிட்டு செய்யுங்கள்.

ஆகவே அதிகாலையில் எழும்புங்கள். நிச்சயமாக உங்கள் வாழ்க்கையில் வெற்றியை நோக்கிய ஒரு மாற்றம் ஏற்படும்.

**சகி**


HOTEL
NIRUTHA
NIRUTHA
Main Road, Kommathurai, Chenkalady, Sri Lanka.
Tel: +94652054444 Fax:+94652054092
UK Hotline: +447850927964
Email: hotelnirutha@yahoo.com
Visit: www.hotelnirutha.com
Hotline:
+94 779 990 910


NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY
Are you 18+ and have GCSEs or work experience?
Do you have A levels but missed your place at university?
Foundation Degree Business (London Metropolitan University)
Foundation Degree Hospitality Management (London Metropolitan University)
HND Business (Pearson)
HND Hospitality Management (Pearson)
BA (Hons.) Final Year- Business (London Metropolitan University)
BA (Hons.) Final Year- Hospitality Management (London Metropolitan University)
Student Finance Available
Judian Joseph
Mob: 07759802175
Mob: 07453641556

# மட்டு மாநகர சபை

## மாநகர சபை எல்லைக்குள் உணவு விடுதிகளில் பரிசோதனை



மட்டக்களப்பு மாநகர அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் உணவகங்களின் தரம் குறித்தும் அங்கு சமைக்கப்படும் உணவின் சுகாதார நிலமைகள் குறித்தும் ஆராய்ந்து, அவற்றை வகைப்படுத்தும் நடவடிக்கைகளை பொதுச் சுகாதார பாரிசோதகர்களுடன் இணைந்து மாநகர சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டிருந்தனர்.


இதன்படி உணவகங்கள் சோதனை செய்யப்பட்டு அவற்றிற்கான தரச்சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வானது மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன், ஆணையாளர் கா.சித்திரவேல், சுகாதார நிலையியல் குழுவின் தலைவர் சிவம் பாக்கியநாதன், மாநகர சபையின் பிரதி ஆணையாளர் என்தனஞ்ஜெயன் ஆகியோர் கலந்து கொண்டு இத்தரச் சான்றிதல்களை வழங்கி வைத்தனர். இதில் 'A' தரத்திலான 15 உணவகங்களுக்கும் 'B' தரத்தினலான 23 உணவகங்களுக்கும் தரச் சான்றிதல்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன். 'C' மற்றும் 'D' தரநிலையில் உள்ள உணவகங்கள் 'A' மற்றும் 'B' சான்றிதல்களை ஒரு மாத காலத்திற்குள் பெற்றுக் கொள்ளாது விட்டால், அந்த உணவகங்களின் அனுமதிகள் இரத்து செய்யப்படும் என மட்டக்களப்பு மாநகர முதல்வர் நிபந்தனை விதித்தார்.

அத்துடன், மட்டக்களப்பு மாநகர சபைக்குள் உள்ள உணவகங்களில் பயன்படுத்தப்படும் இறைச்சிகளில் 75 வீதத்திற்கும் மேற்பட்ட இறைச்சி மாநகரசபைக்கு வெளியில் இருந்துவருவதாகவும், ஆனால், மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வெட்டப்படும் இறைச்சிகள் மாத்திரமே மாநகர சுகாதார பிரிவினரால் உறுதிப்படுத்தப்படுகின்றன என்றும் அவ்வாறு வெளியில் இருந்துவரும் இறைச்சிகளை யாரும் உறுதிப்படுத்த முடியாது இருப்பதாகவும் எனவே இறைச்சிகளை வெளியில் இருந்து கொண்டு வருவது நிறுத்தப்பட்டு மட்டக்களப்பு மாநகர சபைக்குள்ளேயே அவற்றினை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் முதல்வர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இதுவும் ஒரு நல்ல ஐடியா





மட்டு வாவி மிகவும் அழகானது. ஆனால், அதன் அழகை எந்த அளவுக்கு நாம் பயன்படுத்துகிறோம். நமது பொருளாதார ஈட்டத்துக்கு எந்த அளவுக்கு பயன்படுத்த முடியும்?

இந்த வாவியை ஏன் நாம் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கப் பயன்பத்தக்கூடாது ? படகு வீடுகள் (Boathouse), படகு உணவகங்களை (Boat Food court) உருவாக்கக்கூடாதா?

இது மட்டு. மக்களுக்கு தொழில் வாய்ப்பைத் தருவதுடன் மாநகரசபைக்கும் வருமானம் ஈட்டும் அம்சமாக அமையலாம்.

நகரின் அழகு நமக்குப் பயன்பட்டும். ஆனாலும், சுற்றுச்சூழல் மாசுபடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## மட்டக்களப்பு மாநகர சபையின் வரவு செலவுத்திட்டம்





மட்டக்களப்பு மாநகரசபையின் முதலாவது வரவு-செலவுத்திட்டம் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையின் வரவு-செலவுத் திட்டத்தினை சமர்ப்பிற்பதற்கான விசேட அமர்வு செவ்வாய்க்கிழமை காலை மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி. சரவணபவன் தலைமையில் ஆரம்பமானது.

இதன்போது மாநகரசபையின் முதல்வரினால் வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு, அது தொடர்பான விசேட உரை நிகழ்த்தப்பட்டதை தொடர்ந்து உறுப்பினர்களின் விவாததத்துக்கு விடப்பட்டது.

வரவு – செலவுத்திட்டம் தொடர்பிலும் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பிலும் இதன்போது பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. வரவு-செலவுத்திட்ட தயாரிப்புகளில் உறுப்பினர்கள் சிலர் புறக்கணிக்கப் பட்டதாகவும் இதன்போது கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

எனினும் அனைவரினதும் கருத்துகளும் மாநகர மக்களின் எதிர்பார்ப்புகள் உள்ளடக்கப்பட்டே வரவு-செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டதாக மாநகர முதல்வரினால் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் வரவு-செலவுத்திட்டத்தினை வாக்கெடுப்புக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட நிலையில் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டபோது வரவு –செலவுத்திட்டப் பிரேரணைக்கு எதிராக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உறுப்பினர்கள் ஐந்து பேரும் ஈ.பி.டி.பி.உறுப்பினர் ஒருவரும் வாக்களித்தனர்.

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி,தமிழர் விடுதலைக்கூட்டணி,தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி உறுப்பினர்கள் வரவு-செலவுத்திட்டத்திற்கு ஆதவு வழங்கினர்.

இதனடிப்படையில் 29 உறுப்பினர்கள் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாகவும் 06 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்துடன் 03 உறுப்பினர்கள் சபைக்கு இன்று சமூகமளிக்கவில்லை. 23 மேலதிக வாக்குகளினால் வரவுசெலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதாக மாநகர முதல்வர் அறிவித்தார்.

## சாய்ப்புச் சட்டம் தளர்வு



மட்டக்களப்பு மாநகரசபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படுகின்ற வர்த்தக நிலையங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த சாய்ப்புச் சட்டமானது பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தற்காலிகமாக ஒரு மாதத்திற்கு தளர்த்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் கௌரவ தியாகராஜா சரவணபவன் அறிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் நத்தார், புதுவருடப் பிறப்பு மற்றும் தைப் பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு வியாபார நிலையங்களின் விற்பனை அதிகரிப்புக் காலம் மற்றும் நுகர்வோரின் கொள்வனவு வசதிகள் போன்றவற்றினைக் கருத்திற் கொண்டு சகல வியாபார நிலையங்களும் 15.12.2018ந் திகதி தொடக்கம் 15.01.2019ந் திகதி வரையான காலப் பகுதிக்குள் வரும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதனை சகல வர்த்தக நிலைய உரிமையாளர்களது கவனத்திற்கும் கொண்டு வருவதற்காக வர்த்தக சங்கத் தலைவருக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததுடன், இச் சாய்ப்புச் சட்ட நடைமுறையானது மீண்டும் எதிர்வரும் 16.01.2019ந் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என்றும் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

# இங்கிதம் மறந்துவிட்டோமா?

**சஞ்சயன் செல்லமாணிக்கம்**



நான் சற்றுப் பழையவன். எனது பாடசாலையும் அதன் ஆசான்களும் எனக்குள் சில முக்கிய விழுமியங்களை இறுகவே ஊன்றிவிட்டிருக்கிறார்கள்.

அதில் முக்கியமானது நேரந்தவறாமை. நேரம் தவறினால் நான் பதற்றப்படுவேன். என்னால் பலரின் நேரம் பாழாகிறதே என்ற குற்றவுணர்ச்சி என்னைப் பற்றிக்கொள்ளும். தலைகுனிவு ஏற்பட்டதுபோன்று மனது சங்கடப்படும்.

இரண்டாவது, எதையும் நேர்படப்பேசும் பழக்கம். அது யாராக இருப்பினும் நியாயமான கருத்தாடலுடன் உண்மையைப்பேசு. அவர் பெரியவர், எனது ஆசான், பெரும் செல்வாக்குள்ளவர், அரசியல்வாதி என்றொல்லாம் பயந்து உண்மையை மறைக்காதே எனவும் கற்பிக்கப்பட்டிருக்கிறேன்.

எதையும் சுயசிந்தனையின் அடிப்படையில் சிந்தி. ஒருவர் பெரியவர் என்பதற்காக அவரது கருத்தை நீ ஏற்கவேண்டிய அவசியம் இல்லை. அதனை ஆதாரங்களுடன் மறுத்துரைக்கும் உரிமை உனக்குண்டு.

இவற்றைபெயல்லாம் கற்பித்தவர் எனது பேராசான் பிரின்ஸ் காசிநாதர். ஒரு முறை அவரை எதிர்த்தே ஒரு சபையில் உரையாற்றியதை கேட்டுக்கொண்டிருந்தவர், “இன்று மாலை வீட்டுக்கு வா” என்றார். அவரது வீட்டில் அவரைச் சந்தித்தபோது “எனக்கு எதிராக ஏன் அப்படி உரையாற்றினாய்” என்றார். “நான் அவற்றை உங்களிடம் இருந்துதான் கற்றேன்” என்றபோது, முதுகில் தட்டி புன்னகைத்தார். அவர் முகத்தில் பெருமை படர்ந்திருந்த்தைக் கண்டேன்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை எங்கள் கல்லூரியின் அதிபரும் பேராசானும், முன்னைநாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும், யுத்தகாலத்தில் தமிழ் முஸ்லீம் சமூகங்களுக்கு பிரசைகள் குழுத்தலைவராக இருந்து பெரும்பணியாற்றியவரும், பல உயர் பதவிகளினூடாக கிழக்கிற்கு அளப்பரிய சேவையாற்றிய பிரின்ஸ் காசிநாதரின் இறுதிநிகழ்வில், மட்டக்களப்பின் கல்விமான்கள் என்றழைக்கப்படுவோரும், பெரும் பொறுப்புக்களில் உள்ள உயரதிகாரிகளும், அரசியல்வாதிகளும் நடந்துகொண்ட முறைபற்றிய பதிவே இது.

இப்பதிவில் உள்ள அனைத்தும் எனது கருத்துக்களே. இதன்பின்னால் வேறு மனிதர்களோ, நிறுவனங்களோ இல்லை என்பதை மிகவும் தெளிவாகப் பதிவுசெய்ய விரும்புகிறேன். நாகரிகமான எந்த எதிர்வினைக்கும் பதிலளிப்பேன் என்பதையும உறுதிப்படுத்துகிறேன்.

முதலில் எனது பாடசாலைக்காலத்துக் கதையொன்றுடன் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. அக்காலத்தில் எமது, வாராந்த மாணவர் ஒன்றுகூடல் திங்கட்கிழமைகளில் காலை 08.05க்கு ஆரம்பமாகும். முதலாவது மணி, இரண்டாவது மணி என்று இரண்டு மணிகள் அடிக்கும். முதலாவது மணியடித்தவுடன் நாம் மண்டபத்தினுள் செல்லவேண்டும். இரண்டாவது மணியடித்தவுடன் ஊசி விழுந்தாலும் கேட்கும் அமைதி அங்கு நிலவும். இரண்டாவது மணியடித்து சில கணங்களுக்குள் பிரின்ஸ் காசிநாதர் உள்ளே வருவார். அடுத்துவரும் 15 நிமிடங்களும் அனைவரது கவனங்களும் அதிபரின், உப அதிபரின், ஆசிரியர்களின் உரைகளை கேட்பதிலிருக்கும். அந்நேரங்களின் அமைதியை மீறுபவர்களுக்கு தண்டனை மேடையில் நிறைவேற்றப்படும்.

இந்த ஒன்றுகூடல் ஆரம்பித்தபின் பாடசாலைக்கு வரும் மாணவர்கள், ஆசிரியர்கள் மண்டபத்திற்கு வெளியே காத்திருக்கவேண்டும். அனுமதி கிடைத்தால் உள்ளே செல்லலாம். இதற்கான காரணம் மண்டபத்தின் அமைதியை புதிதாக உள்ளே நுளைபவர்கள் கெடுக்கக்கூடாதென்பதேயாகும்.

சிலவேளைகளில் பிரின்ஸ் காசிநாதர் உள்ளே வருவதற்குப் பிந்தினால், உப அதிபர் ஒன்றுகூடலை ஆரம்பிப்பார். அப்போது பிரின்ஸ் காசிநாதர் வந்தால், உப அதிபரின் உரை முடியும் வரையில் மேடைக்குச் செல்லமாட்டார். கதவருகே நின்றுகொள்வார். நிகழ்வுகளுக்கும் அவற்றை வழிநாடாத்துபவர்களுக்கும் அவர் காண்பிக்கும் மரியாதை என இதைக் கொள்ளலாம்.

அடுத்ததாக உங்களுக்கு நான் பிரின்ஸ் காசிநாதரை அறிமுகப்படுத்தவேண்டும். நேரம் தவறாமை, கண்டிப்பு, வாய்மை, எவருக்கும் அஞ்சாது தனது கருத்தை எந்தச் சபையிலும், எவர் முன்னிலையிலும் அச்சமற்றுக் கூறும்பண்பு, நலிந்தோரின் நலம் பேணல் என்பன அவருடைய முக்கிய அடையாளங்கள். இதை அவர் தனது 90 வயதுகளிலும் மிகவும் கடுமையாக கடைப்பிடித்தவர். அவரை மிக நன்கு அறிந்தவர்களுக்கு இது நன்கு புரியும்.
அவருடைய இறுதியஞ்சலி நிகழ்வினை மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பொறுப்பேற்றிருந்தது. நாம் பின்வரும் அறிவித்தலை சமூக ஊடங்களினூடாக மிகவும் தெளிவான முறையில் அறிவித்திருந்தார்கள்.
//Please note the following
Any one interest to do a speech contact us to allocate a time frame. Time duration for speech 2 to 3 minutes.// தொடர்பு கொள்ள வெண்டியவரின் தொலைபேசி இலக்கமும் குறிப்பிடப்பட்டிருந்தது இந்த அறிவிப்பில் முக்கியமான விடயங்கள் இரண்டு முக்கிய விடயங்களுள்ளன.

முதலாவது, அஞ்சலி உரை 2 – 3 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்.

இரண்டாவது, உரையாற்ற விரும்புபவர்கள் பழையமாணவர் சங்கத்தினருடன் தொடர்புகொண்டு, உங்கள் உரையின் நேரத்தினை பதிவுசெய்துகொள்ளுங்கள்.
இந்த அறிவித்தலை புரிந்துகொள்வதற்கு University of Oxford சென்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை. சாதாரண 5ம் வகுப்பு மாணவர்களால் இதனை மிக மிக தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலேயே இது எழுதப்பட்டிருந்தது. சனிக்கிழமை மாலைக்கு முன்னதாக தங்களுக்கு உரையாற்ற நேரம் தருமாறு கேட்ட அனைவருக்கும் 2-3 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட நேரஅட்டவனையின்படி 10.30 வரையில் அஞ்சலி உரைகளும், 10.30 மணியில் இருந்த 11.15 மணிவரை ஆராதனையும், 12.30 மணியளவில் ஆலையடிச்சோலை மயானத்தில் நல்லடக்கமும் எனத் திட்டமிடப்பட்டிருந்தது.

08.30 மணிக்கு திட்டமிடப்பட்ட நேரத்தில் ஆசானின் இறுதியஞ்சலி ஆரம்பித்தது.

நிகழ்வு ஆரம்பித்து உரைகள் ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, அஞ்சலி நிகழ்விற்கு நேரம்பிந்தி வந்து, தாமும் உரையாற்ற வேண்டும் என்ற அழுத்தத்தினூடான கோரிக்கையை முன்வைத்தனர்.

உங்கள் உரைக்கான பதிவினை நேற்றைக்கு முன்னமே மேற்கொண்டீகளா என்று கேட்டால் ”நீங்கள் எனக்கு அறிவிக்கவில்லையே” என்ற ரீதியில் அவர்களுடைய பார்வையும், உடல்மொழியும் இருந்தையும் மறுப்பதற்கில்லை.

ஆசானுடன் எவ்வித தொடர்புமற்ற, அவரிடம் கற்காத சில அதிகாரிகளுக்கும் சில செல்வாக்கு மனிதர்கள் உதவி புரிந்தார்கள் என்பதும் வேதனையானது.

நேரப்பிரச்சனை உள்ளது, இருப்பினும் “உங்களுக்கு இரண்டு நிமிடங்கள் தருகிறோம்” என்றதனை ஏற்றுக்கொண்டு ஒலிவாங்கியைக் கையில் எடுப்பார்கள். அதன்பின் அவர்களிடம் இருந்து ஒலிவாங்கியை வாங்கிக்கொள்ள நாம் பட்ட பாடு இருக்கிறதே. அதைவிட நாம் கல்லில் நாருரித்திருக்கலாம்.

உரைகள், மூன்று நிமிடங்கள் கழிந்து 5 நிமிடங்கள் ஆகியதும் அவர்களின் முதுகினைத் தடவி அன்பாக நேரத்தை கவனியுங்கள் என்பேன். பலருக்கு முதுகிலிருக்கவேண்டிய உணர்ச்சி நரம்புகள் செயலிழந்திருந்தமை அப்போதுதான் எனக்குப் புரிந்தது.

3 நிமிடங்கள் 5ஆகி, 5 நிமிடங்கள் 8 ஆகியதும் முதுகைத் தடவுவதை தவிர்த்து, தமிழில் நேரம் முடிந்துவிட்டது என்பதை மரியாதையுடன் அவர்களுக்கு கேட்குமாறு கூறினேன்.

அவர்களது செவிப்புலனும் இயங்காது என்பதை அப்போதான் அறியந்துகொண்டேன். அதுமட்டுமல்ல சிலருக்கு தமிழும் புரியவில்லை என்பதையும் அறிந்தபோது, தமிழர் விடுதலைக் கூட்டணியிலும், பல உயரதிகாரிகளிடத்திலும் பரிதாபம் ஏற்பட்டது.

நிகழ்வின் நாயகனை என்னால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. இருப்பினும் மெதுவாக அவரைப் பார்த்தேன். அப்போது என்னாசான், என்னைப் பார்த்த பார்வை “ஏன்டா, உங்களுக்கு என்ன பாவமடா செய்தேன். என்னை நிம்மதியாக அனுப்பமாட்டீர்களா” என்பது போலிருந்தது.

அந்நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் இச் சமூகத்திற்கு வழிகாட்டும் பதவிகளில் இருப்பவர்கள், இருந்தவர்கள்.

ஒருமுறை அரசாங்கப்பதவிகள் என்னும் பொருள்பட ஆசானுடன் உரையாடிக்கொண்டிருந்தோம். அவர், Public servant என்பதன் அர்த்தம் “மக்களின் வேலைக்காரன்” என்பதே. ஆனால் இப்போதுள்ள பலர் அதனை “மக்கள் தனது வேலைக்காரர்கள்” என்று அர்த்தம் கொள்கிறார்கள் என்றார். ஆசானின் கருத்து உண்மைதான்போலிருக்கிறது. ஒரு மனிதனின் இறுதி நிகழ்வில் இப்படியா நடந்துகொள்வது. சபை இங்கிதம் என்பதை அறியாதவர்களா நாம்?

ஒரு மனிதனின் இறுதி நிகழ்வுகளுக்கு என்று எமது சமூகத்தில் எழுதாத பல விதிகள் உண்டு. அவற்றில் முக்கியமானது இறந்திருக்கும் மனிதரை கனம்பண்ணவே நாம் அங்கு செல்கிறோம் என்பது. இப்படியான நிகழ்வுகளுக்கென்று உடைத்தேர்வுகள் உண்டு. இந்திகழ்வுகளில் அமைதி மிக முக்கியமானது. ஒரு மனிதனின் இறுதி நிகழ்வு என்பதானது ஒன்றும் கழியாட்ட நிகழ்வல்ல.

மட்டக்களப்பின் ஆசிரியப்பெருந்தகைகள், அதிபர்கள், குருமார்கள், பெரும் அதிகாரிகள், வைத்தியக் கலாநிதிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், மற்றும் பல உயர்நிலை அதிகாரிகள் என்பவர்களிடம் ஒரு இறுதிநிகழ்வில் நடந்துகொள்ள வேண்டிய முறைகள்பற்றிய மிகச் சாதாரண அறிவேனும் இல்லாதிருந்தது போன்றே பலரும் நடந்துகொண்டார்கள்.

அந் நிகழ்வு ஆரம்பிப்பதற்கு முன்னமே வந்திருந்தவர்களை விரல்களைக்கொண்டு எண்ணிவிடலாம். அங்கு நின்றிருந்த, வந்துசென்ற பலர் மகிழ் விழாவில் கலந்துகொள்வதுபோன்ற உடையலங்காரங்களுடன் வந்திருந்தார்கள். முக்கியமாக சீமாட்டிகள்.

ஒருவர் உரையாற்றிக்கொண்டிருக்கும்போது உள்ளே மண்டபத்தினுள் உட்புகுபவர்கள் எதுவித வெட்க உணர்வமின்றி உள்ளே நுழைகிறார்கள், வெளியேறுகிறார்கள். சபை நாகரீகம் என்பது இதுதானா?

இறந்திருக்கும் மனிதனைப்பற்றி உரையாற்றிக்கொண்டிருக்கிறார்கள், அதிகமானோர் திருமணவீட்டில் நண்பர்களுடன் சத்தமாக உரையாடிக் கழிப்பதைப்போன்று சபையின் அமைதியை கவனிக்காது தமது மகிழ்ச்சியில் கவனமாக இருந்தனர்.

பிரின்ஸ் காசிநாதரின் இறுதி நிகழ்வானது அம்மனிதனின் விழுமியங்களுக்கு அமைய நடைபெறவேண்டும் என்பதே நியாயமானது. ஒருவருக்கு நாம் காண்பிக்கக்கூடிய இறுதி மரியாதை அது.

அவரது நேரந்தவறாமை, ஒழுங்கு, கூட்டங்களை அவர் நடாத்தும்போது அங்கிருக்கும் அமைதி போன்றவற்றை நான் இப்பதிவின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதற்கான காரணங்களை நீங்கள் இப்போது புரிந்துகொண்டிருக்கலாம்.

மண்டபத்தில் உட்கார்ந்திருந்த மட்டக்களப்பின் புத்திஜீவிகளால், கல்விமான்களினால் ஒரு அஞ்சலி நிகழ்வில் அமைதியைப் பேண முடியவில்லை. இப்படியான கல்விமான்களினால் எவ்வாறு எங்கள் சமூகத்திற்கு வழிகாண்பிக்க முடியும் என்ற கேள்விக்கான பதிலை உங்களிடமே விட்டுவிடுறேன். இப்படியானவர்களிடம் எமது மாணவச்சமூகம் எதனைக் கற்றுக்கொள்ளப்போகிறது? இதையா எமது சமூகம் விரும்புகிறது?

கடமையில் நின்றிருந்த சிறிய சாரணர் இயக்கத்து மாணவர்களின் ஒழுக்கத்தைக் கண்ணுற்றபோது மனது பெரும் ஆறுதலை

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# அன்றும் இன்றும் - அங்கம் 02

## தெற்கின் சந்திரிக்காவும் வடக்கின் சந்திரகலாவும்



தமிழறிஞர் ஒருவர், தெருவில் சென்று கொண்டிருந்தார். சைக்கிளில் வந்த ஒருவன், கவனிக்காமல் அவர் மீது மோதி விட்டான். உடனே அவன் "ஐயா, மன்னித்துக் கொள்ளுங்கள். தெரியாமல் மோதி விட்டேன்." என்றான்.

இதைக் கேட்டதும் அந்த தமிழறிஞர், கோபமாக, "மன்னிப்பு என்பது உருதுச் சொல்! பொறுத்துக் கொள்ளுங்கள் என்பதே சரி." என்றார்.

மோதியவனும் அவ்வாறே சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்றுவிட்டான். அந்தத் தமிழறிஞர்தான் தமிழ் உலகில் புகழ்பெற்ற தேவநேய பாவாணர்!

இவரது பெயரில் சென்னையில் ஒரு நினைவு மண்டபமும் இருக்கிறது.

அவர் அன்று சொன்ன கருத்து, இன்றளவும் விவாதிக்கப்படுகிறது. ஆய்வறிஞர்கள் உருது மொழியையும் தமிழ் மொழியையும் இதற்காகவும் ஆராய்ந்தார்கள்.

இது அன்று நடந்த சம்பவம். இன்று நடக்கும் சம்பவங்களுடன் மன்னித்தல் - பொறுத்தருள்தல் பற்றி பார்த்தால் பல சுவாரசியங்களை காணமுடிகிறது.

இலங்கையில் நீடித்த போரினால் கொல்லப்பட்டவர்கள், ஆயுதம் ஏந்திய இயக்கங்களினால் அநாவசியமாக கொல்லப்பட்ட சமூகத்தலைவர்கள், சமூக நலன் விரும்பிகள், கல்விமான்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கை பல்லாயிரங்களையும் தாண்டி இலட்சத்தை எட்டிப்பிடிக்கும். அத்துடன் தாக்குதல் சம்பவங்களில் படுகாயமுற்று உடல் ஊனமுற்று - கண்பார்வையை இழந்தவர்கள், மாற்றுத்திறனாளியாக மாறிப்போனவர்கள், இன்றும் வலிசுமந்த மேனியர்களாக நடமாடுகின்றனர்.

தினமும் காலை எழுந்ததும் கண்ணாடி முன்னால் நிற்கும்போது, தமக்கு நேர்ந்த பாதிப்பு பற்றிய நினைவு வந்து, மனஉளைச்சலையும் தரக்கூடும்.

அன்றும் - இன்றும் என்ற இந்தப் பதிவில் வரும் இரண்டு பெண்களைப் பற்றிச்சொல்ல விரும்புகின்றேன். இவர்கள் இரண்டுபேருமே ஏதோ ஒரு வகையில் ஆளுமைகள்தான். இழப்புகளுக்குப்பின்னரும் சமூகத்தில் தலைநிமிர்ந்து நிற்பவர்கள். இவர்களின் ஆன்மபலம் முன்னுதாரணமானது.

அதில் ஒருவர் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க பண்டாரநாயக்கா. 1945 ஆம் ஆண்டில் பிறந்திருக்கும் இவர், இலங்கையில் பிரதமர் பதவியில் இருந்த பெற்றோர்களின் புதல்வி. தந்தை 1959 இல் கொல்லப்பட்டபோது இவரது வயது 14. கொழும்பில் படித்து, மேற்கல்விக்காக வெளிநாடு சென்று, திரும்பி, அரசியல் பிரவேசம் செய்து, தந்தை தொடங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மகளிர் அணித்தலைவராகி, படிப்படியாக அரசியலில் பிரகாசித்து, கணவர் விஜயகுமாரணதுங்க தொடங்கிய மக்கள் கட்சியின் துணைத்தலைவியானவர். கணவரை தனது 43 வயதில் பறிகொடுத்தார். மக்களின் அனுதாப அலைவீசியதையடுத்து, அரசியலில் மீண்டும் தீவிரமானார். முதலில் மேற்கு மாகாண முதல்வராகவும் தெரிவாகி, 1994 இல் தாயும் தந்தையும் பிரதமராக பணியாற்றிய நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்து, பின்னர் நாட்டின் அதிபரானவர்.

உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெயரையெடுத்த தனது தாயாரை தனது அதிபர் பதவிக்காலத்தில் தனது முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவைத்தவர். மகளிடம் பதவிப்பிரமாணம் செய்யும் தாயார் என்று அன்று செய்திகள் எழுதப்பட்டன.

தந்தையை, காதல் கணவரை கொலையாளிகளிடம் பறிகொடுத்தவர், 1999 இல் கொழும்பில் புலிகளின் தற்கொலைத்தாக்குலின்போது படுகாயமுற்று வலது கண் பார்வையை முற்றாக இழந்தவர்.

அதன்பின்னரும் அவர் பொதுவாழ்வில் சோர்ந்துபோகாமல், துவண்டுவிடாமல் இலங்கை அரசியலில் ஒரு கிங்மேக்கராக இயங்கியவர். சாணக்கியமாக செயற்பட்டு, மகிந்தராஜபக்ஷவுக்கு எதிராக மைத்திரியை பொதுவேட்பாளராக்கி வெற்றிபெறவைத்து Silent killer ஆனவர்.

தற்போது தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவியாக செயற்படும் அவர், இந்த ஆண்டு வடக்கிற்கு சென்று, அன்று தனது பதவிக்காலத்தில் தனது அரசுக்கு எதிராக போரிட்டு புனர்வாழ்வு பெற்றவர்களையும் போரில் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் காயமுற்ற பெண்களையும் சந்தித்து, புனர்வாழ்வுப்பணிகளில் பெண்களையும் இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டங்கள் பற்றியும் ஆராய்ந்தாவர்.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும், யாவரும் அறிந்த செய்திகள்தான். சந்திரிக்கா தனது வடபகுதி பயணத்தில் சந்தித்த ஒரு இளம்பெண், இலங்கையில் புலிகளின் போரியல் வரலாற்றில் மிகவும் முக்கிய பங்கெடுத்தவர். அவர் 1974 ஆம் ஆண்டு மன்னாரில் பிறந்தவர். எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் மிக்க இவர், 1991 ஆம் ஆண்டில் புலிகள் இயக்கத்தில் இணைந்தார். ஆயுதம் ஏந்தினார். அத்துடன் புலிகளின் நிதர்சனம் மற்றும் புலிகளின் குரல் முதலான ஊடகங்களிலும் பணியாற்றினார்.



அவரது இயற்பெயர் சந்திரகலா. இயக்கத்திலும் இலக்கியத்திலும் அவரது பெயர் வெற்றிச்செல்வி. யுத்த காலத்தில் நேர்ந்த ஒரு வெடிவிபத்தில் வலதுகையையும் இழந்து, வலது கண்ணிலும் பாதிப்புக்குள்ளானவர்.

1997 முதல் இலக்கியத்துறையிலும் ஈடுபட்டு கவிதை, சிறுகதை, கட்டுரை, நாவல் முதலான துறைகளில் எழுதிக்கொண்டிருப்பவர். போர் முடிவுக்கு வருமுன்னரே 2007இல் "இப்படிக்கு அக்கா" என்ற கவிதைத்தொகுப்பையும் எழுதி, இதுவரையில், இப்படிக்கு தங்கை, துளிர்விடும் துயரங்களும் நம்பிக்கைகளும் (கவிதைகள்), காணமல் போனவனின் மனைவி, முடியாத ஏக்கங்கள் (சிறுகதைகள்), போராளியின் காதலி (நாவல்), வெண்ணிலா (குறுநாவல்), ஆறிப்போன காயங்களின் வலி, ஈழப்போரின் இறுதிநாட்கள் (வரலாற்றுப்பதிவுகள்) முதலான நூல்களை வரவாக்கியவர். வெற்றிச்செல்வி தொடர்ந்தும் இயங்குகிறார், எழுதுகிறார்.

அவரது வாக்கு மூலங்கள் இவை:

"ஈழப்போரின் சாட்சியாகவும் இடப்பெயர்வுகளின் சாட்சியாகவும் ஈழத்தின் அடையாளமாகவும் நானும் இவ்வெழுத்தில் ஆகியிருக்கின்றேன். என் கண்ணால் கண்ட காட்சிகளை அப்போதிருந்த மனதின் உணர்வுகளோடு இங்கே பதிவுசெய்திருக்கிறேன். தமிழர்களின் கண்ணீரை கொஞ்சம் இங்கே சேமித்துவைத்திருக்கிறேன். அந்தக்கண்ணீர் காயாத வடிவமெடுத்திருக்கவேண்டும் என்பதால் இற்றைவரை கண்ணீரையே எழுதிக்கொண்டிருக்கிறேன். இரத்தக்கண்ணீரை" (நூல்: ஈழப்போரின் இறுதி நாட்கள்)

" தேசத்தின் குருத்துகள், அங்கு அனலிடை வெந்த உணர்வுகளுக்கு ஆளாகினார்கள். அந்த உணர்வுகள் அனைத்தையும் சொல்லிவிட முடியாது. தேசத்துக்குருத்துக்களின் வாக்குமூலமாக இதனை எடுத்துக்கொள்ளவேண்டும். நடந்த உண்மைகளை நடந்தது நடந்தபடி வரலாற்றில் பதிவுசெய்யவேண்டும் என்பதே இந்தப்பதிவின் நோக்கம். புனர்வாழ்வு என்று அழைக்கப்பட்ட தடைமுகாம் ஒன்றில் ஒரு தொகுதிப்பெண் போராளிகள் வாழ்ந்த வாழ்தலின் புரிந்துணர்வுக்கு எடுத்துக்கொண்டால் போதும் என்பதே என் தாழ்மையான வேண்டுகோள்" ( நூல்: ஆறிப்போன காயங்களின் வலி)

" வலியோடும் வேதனையோடும் இதனை எழுதிக்கொண்டிருந்த நாட்களில் வீதியில் பயணித்த ஐ.சி. ஆர். சி. வாகனத்தின் கொடியினால் ஏற்பட்ட சத்தம்கூட எறிகணை பராஜ் பண்ணப்படுவதாய் நினைத்து என்னை நிலத்தில் விழ வைத்திருக்கிறது. காற்றால் அசைக்கப்பட்ட தகரத்தின் சத்தம்கூட எறிகணை கூவிக்கொண்டு வருவதாய் நெஞ்சை படபடக்கச்செய்திருக்கிறது. அந்த உயிராபத்தான சூழலுக்குள் மீண்டும் வாழ்ந்த உணர்வு, எழுதி முடித்தபோதும் இருந்தது. இதைப்பதிப்பாக்கத்திற்காக கணினியில் பொறித்தபோதும் அதை மீள் வாசிப்புச்செய்தபோதும் மீண்டும் மீண்டும் குருதி பாய்ந்த வன்னிக்குள் கிடந்து எப்படித்துடித்திருப்பேன் என்பதை இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் புரிந்துகொள்வீர்கள்" ( நூல்: போராளியின் காதலி - நாவல்)

இந்தப்பின்னணிகளிலிருந்து ஒரு உண்மையை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். வடக்கில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க செயலணியில் சந்திரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கும் சந்திரகலா (வெற்றிச்செல்வி) என்ற முன்னாள் ஈழவிடுதலைப் பெண் போராளியும் சந்திரிக்கா என்ற முன்னாள் இலங்கை அதிபரும் போர் நடந்த காலத்தில் எதிரும் புதிருமாக இருந்தவர்கள்.

போர் நீடித்திருந்தால் இந்தச் சந்திப்பு சாத்தியமாகியிருக்குமா? உரிய காலத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள தீர்வு காணப்பட்டிருக்குமானால், சந்திரிக்கா தனது ஒரு கண்ணின் பார்வையை இழந்திருப்பாரா?

சந்திரகலா என்ற வெற்றிச்செல்வி தனது ஒரு கரத்தையும் இழந்து, கண் பார்வையிலும் பாதிப்புக்குள்ளாகியிருப்பாரா?

**ரஸஞானி**

2018 காலப்பகுதியில் தோன்றியிருக்கும் இந்த சமாதான நல்லிணக்கம் 2009 இற்கு முன்னர் ஏன் ஏற்படவில்லை? எதனால் தாமதித்தது?

விடாக்கண்டர்களும் கொடாக் கண்டர்களும், கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

நீடித்த உள்நாட்டுப்போரினால் எங்கள் தேசம் இழந்தது அநேகம்! வெளிநாட்டிலிருக்கும் ஆயுத விற்பனையாளர்களும் ஆயுதத் தரகர்களும் ஈட்டிய லாபம் அநேகம். அமெரிக்காவில் ஆயுத உற்பத்தி தொழிற்சாலைகள் பலவற்றை நடத்திவரும் பெரும் கோடீஸ்வரர் குடும்பங்களைச்சேர்ந்த ஒருவர் அண்மையில்தான் மறைந்தார். அன்று எதிர் எதிர் தரப்பில் நின்று தங்கள் தரப்பு நியாயங்களுக்கு வலுச்சேர்த்த இரண்டு பெண்கள், இன்று - உடல் ரீதியாக வலுவிழந்து, உணர்வு ரீதியாக சந்தித்திருக்கிறார்கள்.

இவர்கள் இருவரும் தினமும் காலையில் கண்ணாடி முன்னால் தோன்றும்போது என்ன நினைப்பார்கள்? யாரை யார் குற்றம் சுமத்துவார்கள்?

வான்மதியும் விண்மீனும் கடலும் காற்றும் நதியும் கொடியும் சோலையும் இயற்கையும் மாறவில்லை ! ஆனால், மாறும் இயல்புள்ள மனிதன் மாறிவிட்டான். அதன் விளைவுகள்தான் யுத்தங்களும், ஆக்கிரமிப்புகளும்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

# தமிழ்பேசும் மட்டக்களப்பின் பூர்வீக குடிகளிடம் காணப்படும் சில சடங்குகள்



மட்டக்களப்பில் இன்றும் வழக்கிலுள்ள நாடக அமிசம் நிரம்பிய சடங்குகள்
மட்டக்களப்பிலே இன்றும் வழங்கிவரும் சமயச் சடங்குகள் சிலவற்றில் நாடக அமிசம் நிரம்பிய சடங்குகளையும் அவற்றில் காணப்படும் நாடகக் கூறுகளையும் முதலில் நோக்குவோம்.

'குமார தெய்வச் சடங்கு'

இச்சடங்கினைச் செய்பவர்கள் வேடர் மரபில் வந்தோராவர். இவர்களது பண்டைய தொழில் வேட்டையாடுதலும், மந்தை வளர்த்தலுமாகும். இன்று இவர்களிற் பெரும்பானோர் கூலி விவசாயத் தொழிலிலும், கூடை பின்னுதல், மீன்பிடித்தல், மரம் வெட்டுதல் தேன் எடுத்தல் ஆகிய தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் பொருளாதார வளம் அத்துணைச் சிறப்புடையதாயில்லை

இவர்கள் தாம் வாழும் இடங்களிலெல்லாம் ஒரு சிறு குமார கோயிலை வைத்திருப்பர். இவர்களின் குலதெய்வம் குமார தெய்வமாகும். முருகனை இவர்கள் குமாரர் என அழைப்பர். இவர்கள் தமிழ் மொழி பேசினும் வேடபாஷை என இவர்களால் அழைக்கப்படும் பாஷையிலேயே வணக்க முறைக்குரிய சொற்களையும், பாடல்களையும் கூறுகின்றனர

இவர்களின் சடங்கு முறைகள் இவர்களின் புராதன வாழ்க்கை முறையின் நினைவுகளாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இக்குழுவினர் மத்தியில் நிலவிய பண்டைய வாழ்க்கைமுறை இன்று அழிந்திருப்பினும் நம்பிக்கை காரணமாக, அப்பண்டைய வாழ்வை இவர்கள் சடங்காக நடத்துகின்றனர் என்பதை இவர்கள் சடங்குகள் உணர்த்துகின்றன.

இவர்கள் பல இடங்களிற் பரவி வாழ்கின்றனர். இவர்கள் தாம் வாழும் இடங்களிலெல்லாம் ஒவ்வோர் குமார கோயில் வைத்து அதற்குரிய சடங்கு செய்வர். மட்டக்களப்பின் வடபாக கடற்கரையோரமாய் அமைந்துள்ள தளவாய் என்னும் கிராமத்திலுள்ள குமார கோயில் இவர்களின் பிரதான கோயில்களில் ஒன்று. அங்கு நடைபெறும் சடங்குகளே இங்கு விளக்கப்படுகின்றன.

குமார கோயில் வேடருக்கு வம்சாவழியாக உள்ள கோயிலாகும். கோயில் மண்ணாலோ, கல்லாலோ கட்டப்பட்டதல்ல. ஒரு குறிப்பிட்ட மரத்தடியே கோயிலுக்கான இடமாகும். ஆண்டுக்கொரு முறை அவ் விடத்தில் பந்தல் தோரணமிட்டு சடங்கு நடைபெறுகிறது.

ஆவணி மாதம் கதிர்காமத்தில் தீர்த்தம் நடக்கும் அன்று இவர்களின் சடங்கு தொடங்கும். ஏழு நாட்கள் தொடர்ச்சியாக இச்சடங்கு நடைபெறும். இக்குமார கோயிலின் தலைமைத் தெய்வம் குமாரர் ஆகும். இங்கு பூசை செய்யும் பூசாரி கப்புகன் என அழைக்கப்படுகிறார். சன்னதம் கொண்டு ஆடுபவர்கள் "கட்டாடி" என அழைக்கப்படுகிறார்கள். இங்கு பூசகரே தெய்வம் ஏறி ஆடுவார். இரண்டு மூன்று பூசகர் இருப்பர். ஒருவர் மீது தெய்வம் வந்தால் மற்றவர் பூசகராக மாறுவர். இங்கு மந்திரம் சொல்லப்படுவதில்லை. வேடபாஷையில் பாட்டுகள் பாடப்படுகின்றன. பாட்டுடன் கொட்டு எனப்படும் பறையும் அடிக்கப்படுகிறது. ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு விதமான கொட்டு எனப்படும் பறை ஒலி உண்டு. அதற்கு தகவே தெய்வம் பிரசன்னமாகி ஆடும். கப்புகன், கட்டாடி ஆகியோர் பரம்பரையாக வருகின்றனர். தகப்பனின் தெய்வம் மகனுக்கு வரும் என்ற நம்பிக்கை இவர்களிடமுண்டு. சடங்கு நடப்பதற்கு முதல்நாள் கோயில் இருக்கும் இடத்தைத் துப்புரவு செய்து விடுகின்றனர்.

மறுநாள் கப்புகன் (பூசாரி) வீட்டிலிருந்து சிலையில் செய்யப்பட்ட குமாரரும், அம்மாளும் உள்ள மடைக்குரிய சாமானுள்ள பெட்டியைக் கொண்டு வந்து கோயில் அமைந்துள்ள இடத்தில் வைப்பர். பின்னர் பாய் விரித்து அதன் மீது வண்ணான் வெள்ளை விரிக்க கன்னிமாருக்கு என்று மூன்று மடை வைக்கப்படும். ஒரு விளக்கும் அருகில் வைக்கப்படும். கன்னிமாருக் குரிய கிருத்தியங்கள் முடிந்தவுடன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கோயிலை வளைத்துக் கொண்டுவந்து கோயிலுக்கெதிரில் மேடையமைத்து மேடைமீது பாய்விரித்து அதன்மீது வெள்ளை விரித்தும் பெட்டியை வைப்பர். அங்கு 5 மடை வைக்கப்படும். அத்தோடு விளக்குக்கு ஒரு மடையும், குமார பெட்டிக்கு ஒரு மடையும் வைக்கப்படும். பின்னர் தீபாராதனை நடைபெறும். அப்போது குமார தெய்வத்திற்குரிய தாளத்தினைக் கொட்டில் மத்தளம் அடிப்போர் வாசிக்க ஒரு பிரதான கப்புகனார் ஆடத்தொடங்க அடுத்த கப்புகனார் பின்வரும் பாடலை பாடுவர்.


ஈந்தா கேடோ ஏ கமோ ஈ மெணாய் முத்தோ கணமாய் ஏஏகாம்ப வணங்கிலாதோ அம்மையே கண பூஜ தெய்யோ டொதுங்கா ஏஏ. மலகவத்தில் பிள்ளேவோ நலுணங் கட்ட கட்ட துவா லா ஏ. வலாப்பு காணங் குமார தெய்வத்திற்கு ஆடும் தலைக்கப்புகனாரிடம் வண்ணான் வெள்ளைத் துணியைக் கொடுக்க அவர், கோயில் வாசலில் நின்று கூரையில் அவ்வெள்ளையை எறிவார். எறிந்தவுடன் வண்ணான் கோயிலுக்கு வெள்ளை கட்டத் தொடங்குவான். வெள்ளை எறிந்தவுடன் குமார தெய்வம் சென்றுவிடும். குமார தெய்வம் சென்றவுடன் ஆலத்தித் தெய்வத்திற்குரிய தாளத்தினைக் கொட்டில் மத்தளம் வாசிப்போர் வாசிப்பர். குமார தெய்வம் வந்த தலைக் கப்புகனார்மீதே ஆலத்தித் தெய்வமும் வரும். ஆலத்தித் தெய்வம் வர, பின்வரும் பாடலைப் பாடுவர்.

இந்தா வேடோ உங், ஏ எ கமேண கமணாய்

ஆலத்திப் பட்டினமாகு திருக்குணாமலை,

திருக்கோயில் கிட்டுவலும் தானதந்தோ தனேரிண குமணாய்.

இப்பாட்டுக்கு கொட்டு அடித்தபடி அங்குள்ள ஆசனத்தில் இரண்டு விளக்குகளை இவ் ஆலத்தி தெய்வம் வைக்கும். வைத்ததும்




அத்தெய்வம் நீங்கக் கப்புகர் மெய் மறந்து வீழ்வார். அவரைப் பிடித்துச்சென்று தண்ணீர் தெளித்து வைப்பார்கள். அதன்பின்னர் சாமான்களை தூக்கிக்கொண்டு கோயிலுக்குள் வைத்து, காய், பூ, பழம் வெட்டுவார்கள். வெட்டிக் கோயிலை அலங்கரித்த பின்னர் இருக்க வேண்டிய சிலைகள் அத்தனைக்கும் அபிஷேகம் செய்தபின் ஏனைய சடங்குகள் நடைபெறத் தொடங்கும். ஆரம்பத்தில் முதன் முதலாக வரும் குமார தெய்வம் இவரைக் குமாரத்தன் எனவும் அழைப்பர்

"நீங்கள் செய்வது நன்றாக வரும். அல்லது பிழையாக வரும்; இதை இப்படிச் செய்யுங்கள்; இப்படிச் செய்யாதீர்கள்"

என்று கூறி ஏழுநாட் சடங்குகளையும் குமாரத்தன் தெய்வம் வழி நடத்தும். பின்னால் வந்து புகுந்த சிலைகள் இவர்களின் வழிபாட்டில் இடம்பெறாமை கவனிப்பிற்குரிய ஓர் அம்சமாகும். மரத்தில் மீது அமைக்கப்பட்ட வேல்/ அதற்கு ஆடை அணிவித்து ஓர் உருவமாகியுள்ளனர். இது ஓர் புராதன வழிபாடு. இன்றும் மட்டக்களப்பில் உயிர்த்துடிப்போடு சில இடங்களில் உள்ளது

இதன் இரண்டாம் நாள் சடங்கு இன்னும் விசேடமும் சுவையும் உடையது

( தொடரும்)

# வேல் வழிபாடு

மரவழிபாடும், வேல் வழிபாடும் உருவ வழிபாட்டிற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவை என்பதை மானிடவியலாளர் விளக்கியுள்ளனர்.(1) எனக் குறிப்பிடுகிறார் நா.வானமாமலை அவர்கள். இவ்வேல் வழிபாடு தமிழர்களிடையே எவ்வாறு தோற்றம் பெற்றிருக்கும் என்பதனையும் அவர் விளக்கியிருக்கிறார். 'கல் கருவி நாகரிகம் மறைந்து உலோக நாகரிகம் தோன்றி இரண்டும் கலவையாக நிலைபெற்றிருந்த காலத்தில் உலோகக் கருவிகளுக்கும், அக்கருவியைப் பயன்படுத்துவோருக்கும் ஏற்பட்ட மதிப்பினால், வேலைப் பயன்படுத்தும் ஒரு தெய்வம் பண்டைத் தமிழர் சிந்தனையில் மதிப்புப் பெற்றது.' என்பது அவரது விளக்கமாகும்.

கிரான் விஜய்

தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் இரும்புக் காலம் அல்லது பெருங்கற்காலத்தில் வேல் வழிபாடு தோன்றிவிட்டது எனலாம். தமிழ் நாட்டில் கிறிஸ்துவுக்கு முன் 1000 ஆம் ஆண்டைச் சேர்ந்த பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய ஆதிச்சநல்லூரில் உள்ள தாழிக்காட்டில் வெண்கலத்திலான வேல் கண்டெடுக்கப்பட்டமையானது அக்காலத்தில் அங்கு வேல் வழிபடப்பட்டிருக்கலாம் என்பதற்குச் சான்றாக அமைகிறது. மெஞ்ஞான புரம் நாகரிகத்தில் (காலம் :கி.மு. 1500?) இரும்பினால் ஆன அம்பு நுனி, திரிசூலம் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன. மகாபலிபுரத்துக்கு அருகில் அமைந்துள்ள சாளுவன்குப்பத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சங்க காலத்தைச் சேர்ந்த கல்லால் ஆன வேல்பற்றிய தகவல் வேல் வழிபாடு பற்றிய மற்றொரு ஆதாரமாக அமைகிறது.

இலங்கையில் பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய பொம்பரிப்பு, அனுராதபுரம், பின்வேவா, கந்தோரடை, பூனகரி ஆகிய இடங்களில் கிடைத்த வேல்போன்ற தொல்பொருட்கள் இங்கும் பெருங்கற்காலத்தில் வேல் வழிபாடு நிலவியிருந்தது என்பதற்குச் சான்றாக அமைகிறது. அநுராதபுரத்திலும் வேல் போன்ற தோற்றமுடைய கருவிகள் கிடைத்துள்ளன. எனினும் இத்தொல்பொருள் ஆதாரங்களைக் கொண்டு தொல்பழங்காலத்தில் வேல் மற்றும் திரிசூல வழிபாடு நிலவியிருந்தது என்ற கருத்து முன்வைக்கப்படவில்லை. மாறாக முருக வழிபாடு நிலவியது என்ற கருத்தே முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், பிற்கால இலக்கியச் சித்தரிப்புக்களில் முருகனுடன் வேல், சேவல், காவடியாட்டம் என்பவை இணைந்திருப்பதைக் கொண்டும் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களில் வேல், சேவல், தங்கவாய் மூடிகள் போன்ற தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டமையாகும்.



ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட சேவல் உருவங்கள் கொண்ட திரிசூலம், காவடியாடுவோர் வாயை மூடப் பயன்படுத்துவது போன்ற தங்கவாய் மூடிகள் போன்ற தொல்பொருட்கள், மெஞ்ஞானபுரம் நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட இரும்பினால் ஆன அம்பு நுனி, திரிசூலம் போன்ற தொல்பொருட்கள்,(8) மற்றும் இலங்கையில் பொம்பரிப்பு, அனுராதபுரம், பின்வேவா, கந்தோரடை, பூனகரி ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் கிடைத்த வேல், சேவல் போன்ற தொல்பொருட்கள் என்பவற்றைக் கொண்டு முருக வழிபாடு நிலவியது என்ற கருத்தே வலியுறுத்தப்படுகிறது. வானமாமலை அவர்களும் பண்டைக்கால மக்கள் போர்த்தெய்வத்தை வழிபட்டனர் என்றே குறிப்பிடுகிறார். இத்தெய்வ வழிபாடு பற்றி விளக்கும் வானமாமலை அவர்கள், 'தமிழ் நாட்டின் மிகப்பழமையான மெஞ்ஞானபுரம் நாகரிகத்தில் தெய்வ வணக்கம் பற்றிய சான்றுகள் கிடைக்காவிடினும் திரிசூலம் இருப்பது வேட்டைக்குரிய அல்லது போருக்குரிய தெய்வத்தை அவர்கள் ஆராதித்தனர் என்பதை விளக்குகிறது' எனவும் குறிப்பிட்டுள்ளார். எனினும் பெருங்கற்காலத்திற்குரிய இத்தொல்பொருட்களும் இக்காலத்திற்குப் பிந்திய இலக்கிய ஆதாரங்களும் வேல் வழிபாடு நிலவியிருக்கலாம் என்ற கருத்தைத் தருவனவாகவே உள்ளன. கே.ஆர்.எஸ்., 'சங்க காலத் தமிழ் மண்ணில், வேல் வழிபாடே மிகுந்து இருந்தது! சிலப்பதிகாரத்தில், வேலுக்கு எனத் தனிக் கோட்டமே இருக்கிறது. இந்த வேல் வழிபாடு நாளடைவில் நின்று விட்டது.' என்கிறார். மானிடவியலாளர்களின் 'மரவழிபாடும், வேல் வழிபாடும் உருவ வழிபாட்டிற்குப்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 16

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### மொழிவளம்

1. 'அச்சம் என்பது மடமையடா' - இங்கு அச்சம் என்பது
   (1) அஞ்சாமை (2) பயம் (3) ஐயம் (4) முட்டாள்தனம்

2. இராமனைக் காட்டுக்கு அனுப்பினாள் கைகேயி. இங்கு காடு என்பது
   (1) அடவி (2) தண்டனை (3) ஆட்சி (4) வரம்

3. அவனின் கீழுதடு இரத்தச் சிவப்பு. இங்கு உதடு என்பது
   (1) வயிறு (2) உதரம் (3) நகம் (4) அதரம்

4. செந்தாமரையில் வீற்றிருக்கும் என்னவளே. இங்கு தாமரை என்பது
   (1) சிவப்பு (2) இலட்சுமி (3) அம்புயம் (4) ஆம்பல்

5. இடுக்கண் வரும் போது நகுக. இங்கு இடுக்கண் என்பது
   (1) சிரிப்பு (2) பணம் (3) பொறாமை (4) துன்பம்

6. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது. இங்கு எளிது என்பதன் எதிர்க்கருத்து
   (1) அரிது (2) குறைவு (3) மேலதிகம் (4) முடியும்

7. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? இங்கு அன்பு என்பதன் எதிர்க்கருத்து
   (1) வன்பு (2) என்பு (3) பண்பு (4) கதவு

8. குற்றம்குறை ஏது இது நந்தவனத் தேரு. இங்கு குறை என்பதன் எதிர்க்கருத்து
   (1) குறைந்தது (2) குறைவு (3) மறை (4) நிறை

9. நவீனம் என்ற பெயரில் ஏதேதோ நடக்கிறது. இங்கு நவீனம் என்பதன் எதிர்க்கருத்து
   (1) புரட்சி (2) புதினம் (3) புராதனம் (4) சினிமா

10. வாழ்க்கையின் அந்தம் முதுமை என்பார்கள். இங்கு அந்தம் என்பதன் எதிர்க்கருத்து
    (1) முடிவு (2) ஆதி (3) இளமை (4) கடைசி

11. குருவை மதித்து நடப்போம். இங்கு குரு என்பதன் எதிர்ப்பால்
    (1) குருத்தினி (2) குருபத்தினி (3) குருவினி (4) குருத்தை

12. கண்டது கற்கப் பண்டிதன் ஆவான். இங்கு பண்டிதன் என்பதன் எதிர்ப்பால்
    (1) பண்டிதை (2) பண்டிதனி (3) பண்டிமாட்டி (4) பண்டியாள்

13. ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்ற வீரன் கௌரவிக்கப்பட்டான். இங்கு வீரன் என்பதன் எதிர்ப்பால்
    (1) வீரி (2) வீராட்டி (3) வீராங்கனை (4) வீரியத்தி

14. பூட்டன் இறந்த செய்தி கேட்டு அதிர்ந்துபோனான். இங்கு பூட்டன் என்பதன் எதிர்ப்பால்
    (1) பூட்டை (2) பூட்டினி (3) பூட்டள் (4) பூட்டி

15. அவன் எசமானின் சொற்படி நடப்பவன். இங்கு எசமான் என்பதன் எதிர்ப்பால்
    (1) எசமானள் (2) எசமானி (3) பிராட்டி (4) பெரியவள்

ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்குப் பரிசில் வழங்கப்படும்.
முடிவுத் திகதி : 27.12.2018.

அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர், அரங்கம், 227, பார் வீதி, மட்டக்களப்பு

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON

IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# கற்போம்

## மரபுப்பெயர்கள் - விடை

**மரபுப்பெயர்கள்** என்ற தலைப்பில் கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடை

| | | | |
|---|---|---|---|
| 1. (3) | 6. (2) | 11. (4) | 16. (2) |
| 2. (1) | 7. (2) | 12. (1) | 17. (4) |
| 3. (1) | 8. (2) | 13. (4) | 18. (4) |
| 4. (3) | 9. (3) | 14. (4) | 19. (3) |
| 5. (4) | 10. (3) | 15. (1) | 20. (2) |

## அதிபர் சேவை தரம் III போட்டிப் பரீட்சைக்கான

**பொது அறிவு வினாக்கள்**

1. இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர் யார்?
2. பல்கலைக்கழக மாணவர்களுக்காக வழங்கப்படும் மகாபோல நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தியவர்?
3. இலங்கையில் உள்ள பல்கலைககழகங்களின் எண்ணிக்கை எத்தனை?
4. ஆதர் ஊ. கிலாக் அவர்கள் பிறந்த நாடு எது?
5. இலங்கையின் 1வது ஒல்லாந்த ஆளுணர் யார்?
6. பாடசாலை மாணவர்களுக்காக அமுல் படுத்தப்பட்டுள்ள காப்புறுதித்திட்டத்தின் பெயர் என்ன?
7. உயர்தர மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்ற சீருடை எழரஉாநச இன் பெறுமதி எவ்வளவு?
8. இலங்கையில் 1வது அமைக்கப்பட்ட பெண்கள் பாடசாலை எது?
9. இலங்கையில் காணப்படும் கணனி அறிவு வீதம் எவ்வளவு?
10. இலங்கையில் முதலாவது தபால் முத்திரை வெளியிடப்பட்ட ஆண்டு?
11. கொழும்பு திட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு?
12. அரசியலமைப்பு பேரவையில் அங்கம் வகிக்கும் சிவில் பிரதிநிதிகள் யாவர்?
13. நீதிமன்றினால் பிறப்பிக்கப்படும் சிவப்பு அறிவித்தல் என்றால் என்ன?
14. சர்வதேச பல்கலைக்கழகம் எங்கு அமைந்துள்ளது?
15. சார்க் அமைப்பின் முதலாவது மாநாடு எங்கு நடைபெற்றது?

**நுண்ணறிவு**

**தகவல் ஒழுங்கமைப்பு (1)**

<u>பின்வரும் தகவலை அடிப்படையாக கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க</u>

**தரவு**

1. ராஜாவும் ரமணனும் நாடகம் மற்றும் கம்பியூட்டர் கற்பிக்கும் ஆசிரியர்கள்.
2. ரவியும், ராஜாவும் கம்பியூட்டர் மற்றும் பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்கள்.
3. ரவி, ரமா மற்றும் ராணி ஆகியோர் பௌதியவியல் மற்றும் வரலாறு கற்பிக்கும் ஆசிரியர்கள்.
4. ராணி, ரவி ஆகியோர் பௌதிகவியல், கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்கள்.
5. ரமா மற்றும் ரமணன் வரலாறு மற்றும் நாடகம் கற்பிக்கும் ஆசிரயர்கள்.

**வினா**

1. பௌதிகவியல், வரலாறு, நாடகம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர் யார்?
   1. ரவி 2. ராஜா 3. ரமா 4. ரமணன்
2. பௌதியவியல், வரலாறு, கணிதம் கற்பிக்கின்ற ஆனால் கம்பியூட்டர் கற்பிக்காத ஆசிரியர் யார்?
   1. ரவி 2. ராஜா 3. ரமா 4. ராணி
3. வரலாறு, நாடகம், கம்பியூட்டர் கற்பிக்கும் ஆசிரியர் யார்?
   1. ரவி 2. ராஜா 3. ராணி 4. ரமணன்
4. நாடகம் மட்டும் கற்பிக்காத ஆசிரியர் யார் ?
   1. ரவி 2. ராஜா 3. ரமா 4. ராணி
5. வரலாறு பாடம் கற்பிக்காத ஆசிரியர் யார்?
   1. ரவி 2. ராஜா 3. ரமா 4. ராணி



# விளையாட்டு

## "கெனடி" என்னும் முன்கள வீரர்



2019ம் ஆண்டினை வரவேற்கும் முகமாக காரைதீவு ஜல்லிக்கட்டு இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டி மிகச் சிறப்பாக (16) காரைதீவு கனகரெத்தினம் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியானது, ஜல்லிக்கட்டு இளைஞர் அமைப்பின் தலைவர் ஏ.விஷிகரன் தலைமையில் நடைபெற்றது.

**காரைதீவு நிருபர் சகா**

பிரதம விருந்தினராக காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கி.ஜெயசிறில் மற்றும் விசேட அதிதிகளாக காரைதீவு பிரதேசசபை உறுப்பினர்கள் மு.காண்டீபன், திருமதி.எஸ்.ஜெயராணி, ச.நேசராஜா, ஆ.பூபாலரெட்ணம், த.மோகனதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இச்சுற்றுப்போட்டியில் பலம் வாய்ந்த 8 அணிகள் கலந்து கொண்டன. சுற்றுப்போட்டியை குதூகலப்படுத்துவதற்காக ஆளவந்தான்,சிங்கம், மாரி, சர்கார், புலி, மங்காத்தா, சாமி, பில்லா எனும் பெயர்களில் அணிகள் களமிறங்கியிருந்ததன. விறுவிறுப்பாக நடைபெற்ற சுற்றுப்போட்டியில் இறுதி போட்டிக்கு பவிதரன் தலைமையிலான பில்லா அணியினரும் கபிலன் தலைமையிலான சிங்கம் அணியினரும் சிந்துஜன் தலைமையிலான புலி அணியினரும் தெரிவு செய்யப்பட்டனர். பலத்த போட்டிக்கு மத்தியில் பில்லா அணியினர் வெற்றி வாகை சூடினர்.

இப்போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக சுலக்சன், தொடர் ஆட்ட நாயகனாக பிரதீசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். முதல் மூன்று அணிகளை பெற்ற அணிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

## இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தின் வருடாந்த பொதுக் கூட்டம்




இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 15.12.2018 அன்று தலைவர் அனுர டீ சில்வா தலைமையில் கொழும்பில் நடைபெற்றது.


இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவரும் மட்டகளப்பு மாவட்ட அரசாங்க அதிபருமான மா.உதயகுமார் அவர்களும் மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் செயலாளர் ரி.காந்தன்




அவர்களும் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தின் உப தலைவர் என். டீ.பாரூக் அவர்களும் கலந்து கொண்டார். இக் கூட்டத்தில் 2019ம் ஆண்டிற்கான செயற்பாடுகள் மற்றும் நடாத்தப்படவுள்ள சுற்றுப் போட்டிகள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றதாக மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் செயலாளர் திரு.ரி.காந்தன் தெரிவித்தார்.

## கால்பந்தாட்டத்தை முறையாகக் கற்றுக் கொடுத்த சௌந்தா சேர்



மட்டக்களப்பில் கால்பந்தாட்டத்தை முறையாகப் பயிற்றுவித்த ஆசான்களுள் ஒருவராக திரு. கு.சௌந்தரராஜன் சேர் அவர்கள் செயற்பட்டிருக்கின்றார். இன்றைய கால்பந்தாட்டத் தலைமுறையினருக்கு இவரது கால்பந்தாட்டப் பயிற்சி நடவடிக்கைகள் பற்றி பெரிதாகத் தெரியாதிருக்கலாம். ஆனால் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் 1980 களில் பிரகாசித்த பழைய தலைமுறையினருக்கு கால்பந்தாட்டத்தினை முறையாகவும் விளையாட்டிற்கே உரிய நுட்பங்களுடனும் பயிற்றுவித்த ஒரு தலைசிறந்த பயிற்றுனராக சௌந்தா சேர் மட்டக்களப்பில் இயங்கியுள்ளார் எனும் செய்திகளை அறியக் கிடைக்கின்றது.

ஒரு சிறந்த உடற்கல்வி ஆசிரியராகவும் கனவான் தன்மை மிக்க கால்பந்தாட்ட வீரனாகவும் அந்நாட்களில் இயங்கிய சௌந்தா சேர், மாவட்டத் தெரிவு வீரர்களுக்கு கால்பந்தாட்டத்தினை முறையாகக் கற்றுக் கொடுக்கும் பணிகளையும் மேற்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பின் தலைசிறந்த கால்பந்தாட்ட வீரராகத் திகழ்ந்த நா.ஜெயசூரியம் அவர்கள் தமக்குக் கால்பந்தாட்டத்தை உரிய முறையில் பயிற்றுவித்த சிறந்த பயிற்சியாளர்களுள் ஒருவராக திரு.கு.சௌந்தரராஜன் சேர் அவர்களைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளமை இங்கு கவனத்திற்குரியதாகின்றது.

சௌந்தா சேர் மட்டக்களப்பு பாடுமீன் பொழுது போக்குக் கழகத்தின் மத்திய கள வீரராக விளையாடியதைப் பற்றிய தகவல்களை அன்று இளைஞர்களாக இருந்த இன்றைய முதியவர்கள் பலர் கூறக் கேட்கக் கூடியதாக உள்ளது. மிகவும் ஒழுக்கமான கனவான் தன்மை கொண்ட சிறந்த மத்தியகள வீரராக சௌந்தா சேர், கால் பந்தாட்டத்தில் தன்னை வெளிப்படுத்தி இருந்தார் என்பதே அவர்கள் கூறும் செய்தியாக உள்ளது.

பின்னாட்களில் ஆசிரியர் சேவையிலிருந்து அதிபர் சேவைக்குச் சென்றமை காரணமாகவும், சில வருடங்கள் காத்திரமான அரசியல் நடவடிக்கைகளில் ஆர்வஞ் செலுத்திமையாலும் சௌந்தா சேர் கால்பந்தாட்டத்திலிருந்து தன்னை விடுவிக்க வேண்டி வந்துள்ளது.

சௌந்தா சேர் கால்பந்தாட்டத்தில் தொடர்ச்சியாக பயிற்சியாளராக செயற்பட்டிருந்தால் மட்டுநகரின் கால்பந்தாட்டம் வேறொரு பரிமாணத்திற்குச் சென்றிக்கும் என்கின்றனர் மூத்த கால்பந்தாட்ட இரசிகர்கள்.

உண்மைதான் திரு.கு.சௌந்தரராஜன் சேர் அவர்கள் காலஞ்சென்ற அதிபரும் தொழிற்சங்கத் தலைவருமான திரு டி.எஸ். கே.வணசிங்கா அவர்களால் ஒரு சிறந்த அதிபராக இனங்காணப்பட்டு அரசடி மகா வித்தியாலயத்திற்கு 1986 களில் அதிபராக கொண்டுவரப்பட்டதன் பின்னர் அரசடி மகா வித்தியாலயம் அடுத்தடுத்து தரமேற்றங்களைப் பெற்றமையும், அங்கே கற்ற மாணவர்கள் பலர் விளையாட்டுத் துறையூடாக சிறந்த ஆளுமைகளாக வளர்க்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

திரு.சௌந்தா சேர் உடற்கல்வியை பிரயோக ரீதியில் முன்னெடுப்பதில் மிகவும் ஆர்வமாக இயங்கியவர். அரசடி மகா வித்தியாலயம் மகாஜன கல்லூரியாக இவரால் மாற்றம் பெற்றதன் பின்னர் இப்பாடசாலையில் ஒரு கால்பந்தாட்டப் பயிற்சி முகாமினைச் சிறப்பாகத் திட்டமிட்டு நடத்தியிருந்தார். கால்பந்தாட்ட விளையாட்டின் நுட்பங்களையும் அதன் பொறி முறைகளையும் பொருத்தமான பயிற்றுவித்தல் உத்திகளினூடாக கற்றுக் கொடுக்கும் சிறந்த பயிற்சி முகாமாக அது அமைந்திருந்தது. அன்று மாணவர்களாக இருந்து இப்பயிற்சி முகாமில் பங்குபற்றியவர்கள் பலர் பின்னாட்களில் மட்டு நகரின் கால்பந்தாட்டத்தில் முன்னணி வீரர்களாக ஜொலித்தமையினைக் காணக் கூடியதாக இருந்தது.

இவ்விதமாக விளையாட்டினை மையப்படுத்தி சிறந்த மாணவ ஆளுமைகளை சிருட்டிப்பதில் தேர்ந்த ஒரு வளகாரியாக சௌந்தா சேர்

**து.கௌரீஸ்வரன்**

மட்டக்களப்பில் இயங்கியுள்ளார். குறிப்பாக கால்பந்தாட்டத்தையும் அதற்கான பயிற்சி நடவடிக்கைகளையும் நல்லொழுக்கமும், அறிவாற்றலும், ஆளுமையும் மிக்க மனித உருவாக்கத்திற்காகப் பயன்படுத்திய சௌந்தா சேரை அவரிடம் கற்றவர்கள் அவரால் ஆளுமையாக்கப்பட்டவர்கள் மறக்க மாட்டார்கள்.

மட்டு நகரின் கால்பந்தாட்டம் நவீன உலகின் சவால்களுக்கேற்ற முன்னேற்றமடைவதற்கு சௌந்தா சேரின் கால்பந்தாட்ட பயிற்சி நடவடிக்கைகளும் அவரின் கால்பந்தாட்டம் தொடர்பான கருத்து விளக்கமும் கற்றறிந்து கவனிக்கப்படுதல் அவசியமாகின்றது.

தொடர்ச்சி...

## சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு -2018

சித்துறு கலைநிகழ்வில் பங்குபற்றிய குழு, பிரதேச மட்டத்தில் தங்களது திறமைகளை வெளிக்காட்டிய சுய உதவிக் குழுக்களின் அங்கத்தவர்களும் குறித்த சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளதாகவும் மட்டக்களபபு மாட்ட சமூக சேவைகள் பிரிவு தெரிவித்துள்ளமை குறிபபிடத்தக்கதாகும்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

தொடர்ச்சி...

## வேல் வழிபாடு

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவை' என்ற கருத்தை கவனத்தில் கொண்டால், பல்லாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்தது 'வேல் வழிபாடு' என்றும் இவ் 'வேல் வழிபாடு' பிற்காலத்தில் முருக வழிபாட்டுடன் இரண்டறக் கலந்து விட்ட ஒரு வளர்ச்சி நிலையினையே சங்க இலக்கியங்களில் காணமுடிகிறதுஎன்றும்முடிவு கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களில் முருக வழிபாட்டுடன் இணைந்து வேல் வழிபாடு சித்தரிக்கப்பட்டுள்ளது மட்டுமன்றி, வடநாட்டு அல்லது சமஸ்கிருத ஸ்கந்த-கார்த்திகேய இணைந்த வழிபாடும் சித்தரிக்கப்பட்டுள்ளது. எனினும் சங்க இலக்கியச் சித்தரிப்புக்கள் சங்க காலத்தில் வேல் வழிபாடு தனியானதொரு வழிபாடாக நிலவியிருக்க முடியும் என்பதைக் காட்டுவதாகவும் அமைகின்றன. சங்க இலக்கியங்களில் முருகு, செவ்வேள் தெய்வங்கள் தொடர்பான வழிபாட்டில் தமிழர்கள் வேலை வழிபட்டதை காணமுடிகிறது. பரிபாடல் - 17 ஆம் பாடலில் வரும்

தேம்படு மலர் குழை பூந்துலகில் வடிமணி
ஏந்திலை சுமந்து சாந்தம் விரைஇ
விடையரை அசைத்த வேலன் கடிமரம்
பரவினர்...

என்னும் செய்யுளடிகளில் வேலன் வேலை ஏந்திவருதல் பற்றிச் சித்தரிக்கப்பட்டுள்ளது. எம்.சண்முகம் பிள்ளை அவர்கள், முருக வழிபாட்டின் தோற்றமாக வேல் வணக்கம் கொள்ளப்படுகிறது. போர்க்களத்திலும் குரவைக் கூத்திலும் வேல் வழிபாடு இடம் பெறுகின்றது. 'ஆடுகளம்', 'வெறிக்களம்' எனச் சங்க இலக்கியங்கள் கூறும் களத்திலும் வேல் கொண்டு செல்லப்பட்டது. நெடுநல்வாடை எனும் சங்க இலக்கியத்தில் 'அவ்வேல் மயில் இறகு, பூமாலைகள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டது' என்ற சித்தரிப்பு வேல் வழிபாட்டின் சிறப்பைக் காட்டுகிறது எனக்குறிப்பிடுகிறார்.

அத்துடன் சங்க இலக்கியங்களில் முருகு, செவ்வேள் பற்றிய சித்தரிப்புக்களில் வேல் எனும் அடைமொழிகள் அதிகம் காணப்படுகின்றன. மேலும் ஐங்குநூறு வேல் வழிபாடு, சிலப்பதிகாரக் குன்றக்குரவை, அருணகிரிநாதர் - வேல் வகுப்பு மற்றும் வேல் விருத்தம், பாம்பன் சுவாமிகள் - வேல் மாறல், வள்ளிமலை சுவாமிகள் - வேற் பதிகம் போன்ற இலக்கியங்களிலும் வேல் வழிபாடு பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்த இலக்கியச் சான்றுகள் வேல் வழிபாடு தனிவழிபாடாக இருப்பதன் எச்சங்களாக கொள்ளத்தக்கனவாகும்.

இத்துடன் தைப்பூசத் திருநாள் என்பது முருகன் தன் தாயிடமிருந்து வேலைப் பெற்ற நிகழ்வைக் குறிக்கிறது. இதன் மூலமும் வேலின் தனித்தவம் காட்டப்படுகிறது. 'முருகன் அன்னையிடம் வேல் வாங்கும் காட்சியை, சிக்கல் சிங்காரவேலர் கோவில் சன்னிதியில் ஒவ்வொரு ஆண்டும் நடித்துக் காட்டுவது வழக்கம். அப்போது சிங்காரவேலர் திருமேனி வேலின் கொதியால் வியர்க்கிறது என்று சொல்வாரும் உண்டு. முருகன் திருமேனி யைத் துடைத்து எடுப்பதும் வழக்கம். எந்தத் திருமுழுக்கும் இல்லாமலேயே, ஒத்தி எடுக்கும் துணிகள் ஈரமாய் நனைவதை காணலாம் என்று கூறுவர்.' என்ற தகவலானது வேல் வழிபாடு தனித்த வழிபாடாக இருந்து பின்னர் முருகனுடன் இணைக்கப்பட்டிருக்கலாம் என்பதனைக் காட்டுகிறது. புரட்டாசி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் திருப்பரங்குன்ற மலை உச்சியில் பக்தர்கள் வேலினைக் கொண்டு சென்று அம்மலையில் ஊன்றி அபிஷேகம் செய்து வழிபடுவது பண்டைய வேல் வழிபாட்டின் எச்சமே எனலாம். தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் தொன்மையான, பிரசித்தமான முருகன் கோயில்களில் மூலமூர்த்தியாக வேல் வைக்கப்பட்டு வழிபடப்படுகிறது. மக்கள் மத்தியில் நிலவும் கதைகளும் 'இக்கோயில்கள் முன்னர் வேல் வைத்து வழிபடப்பட்ட இடங்கள் என்றவாறே அமைகின்றன."இப்போதும் பல தொன்மையான கோயில்களில் முருகன் சிலைக்குப் பதிலாக வேல் வழிபாடுதான் நடந்து கொண்டிருக்கிறது. பழமுதிர்சோலை, திருச்செங்கோடு, ஈழத்தில் செல்வர் சந்நிதி, மலேசியாவில் பத்துமலை, பல கிராம ஆலயங்கள் எல்லாம் வேல் வழிபாடுதான்." என்ற தகவல் முக்கியம் பெறுவதொன்று.

தொடர்ச்சி...

## இங்கிதம் மறந்துவிட்டோமா?

உணர்ந்தது என்பதை மறுப்பதற்கில்லை. அவர்கள் அங்கு நின்றிருந்த நேரங்களில், அவர்களது மௌனத்தை எம் ஆசான் வியந்திருப்பார். இந்தச் சிறுவர்கள் புத்திஜீவிகளுக்கும் கல்விச் சமூகத்திற்கும் முன்னுதாரணமாக இருந்தார்கள் என்றால் அது மிகையில்லை.

மண்டபத்தில் உட்கார்ந்திருந்தவர்களின் சத்தங்களை தாங்க முடியாத நிலையில், தயவுசெய்து அமைதியாக இருப்போமா?, பிரின்ஸ் காசிநாதர் இதனை விரும்பமாட்டார் என்று அரசியல்வாதிகளிடமும், உயர்ந்த பதவிகளிலும், பெருங் கல்விகளைக் கற்றவர்களிடமும் ஒலிவாங்கியில் கேட்டபோது மண்டபத்தில் ஏற்பட்ட அமைதியும், ஒரு சில தலைகள் எனது கோரிக்கை அவசியமானது என்பதையும் வழிமொழிந்தன.
ஒரு இறுதியஞ்சலில் மௌனமாய் இருப்போமா என்று ஒலிபெருக்கியில் கேட்குமளவுக்கு மட்டக்களப்பின் கல்விச்சமூகம் வந்திருக்கிறது என்பது மிகவும் மனவருத்ததிற்குரியது. உரைகள் நீண்டுசென்றபோது உரைகளின் நேரங்களைக் கவனியுங்கள் என்றும் கோரவேண்டியிருந்தது. இருப்பினும், சற்றுநேரத்தில் எனது கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று.

மனிதவாழ்வின் சாதராண விழுமியங்களுக்கும் பல்கலைக்கழக கல்விக்கும், பதவிகளுக்கும், பட்டங்களுக்கும் எதுவித தொடர்புமில்லை. மனிதவாழ்வின் அடிப்படைகளைப் புரிந்துகொள்ளாத, தன்னடக்கமில்லாத எந்தப் பெரிய கல்வியிலும், பதவியிலும் பயனில்லை என்பதை எப்போது புரிந்துகொள்ளப்போகிறோம். இதையா எங்கள் சந்ததிகளுக்கு கற்றுத்தரப்போகிறோம்?

இறுதியஞ்சலிகளில் ஆற்றப்படும் உரைகள் இறந்த மனிதனைப்பற்றியல்லவா இருக்கவேண்டும்.

உங்கள் அரசியலைப் அங்கு பரப்புரை செய்யவேண்டிய அவசியம்தான் என்ன?

பேச்சுக்களில் ஆதாரங்களை அடிப்படையாக்கொண்ட யதார்த்தத்தன்மை இருக்க வேண்டாமா? உங்களது science fiction கதைகளுக்கு ஒரு அஞ்சலி நிகழ்வினை உபயோகிப்பது எத்தனை மலிமானது? எங்கள் ஆசான் அரச பரம்பரையைச் சேர்ந்தவர் என்று எவ்வாறு சற்றேனும் வெட்கமின்றி கதைகட்ட முடிகிறது உங்களால்?

இவையனைத்திலும் தாங்கொணா எரிச்சலைத் தந்தது ஒரு கிறீஸ்தவக் குருவானவரின் பேச்சு. அவர், நிகழ்வு ஆரம்பித்து ஏறத்தாழ அரை மணி நேரத்தின்பின்பே வந்தார். உரையாற்ற நேரம் வேண்டும் என்று வற்புறுத்தி நேரத்தினைப் பெற்றுக்கொண்டபின், மிசனரிகளினால்தான் தமிழர்களின் கல்வி வளர்ந்தது, அவர்களது அளப்பெரிய சேவைகளைக் குறைகூறாதீர்கள் என்ற தொனியில் அவர் தனது அரசியலைப் பேசிக்கொண்டிருந்தார்.

அந்த இடம் உரையாடலுக்கான இடம் அல்ல, என்பதால் அமைதியாக இருக்கவேண்டியிருந்தது.

மிசனறிகளின் வருகைக்கு முன்னான காலத்து இலங்கையின் அறிவியலை, வானியற் சாத்திரத்தின் வளர்ச்சியை, இயற்கை வைத்தியமுறைகளை, கலைவடிவங்களை, இலங்கையின் கட்டடக்கலைகலையை, நீர்வள மேலாண்மையை அவர் கற்றிருந்தால் இவ்வாறு உரையாற்றியிருக்க முடியாது.
அவற்றை அறியாதவர்களின் பேச்சு இது. அல்லது எஜமானர்களுக்காக உண்மையை திரிக்கிறார்.

காலனித்துவம் வரும்வரையில் நாம் என்ன கல்வியறிவற்ற கற்காலத்து குகை மனிதர்களாகவா இருந்தோம்?

ஆங்கில மொழியின்தோற்றக்காலத்தையும், தமிழ், பாலி மொழிகளின் பழமையையும் ஒப்பிட்டால் எமது அறிவுலகம் எவ்வாறிருந்த்து என்பது தெட்டதெளிவாகப் புலப்படும்.

தமிழ் மொழியின் கட்டமைப்பை அறிவியலாக்கிய தொல்காப்பியத்தை 2300 வருடங்களுக்கு முன்பே உருவாக்கிய மனிதர்களின் வழிவந்தவர்கள் நாம்.

இலங்கையில் காலனித்துவம் வருவதற்கு முன்னிருந்த எமது பாரம்பரிய பாடத்திட்ட முறைகள் (Curriculum) அழிந்துபோனதற்கான காரணங்கள் எவை?

இவற்றையெல்லாம் சுயமாய் சிந்திக்க விடாமலும், அவருக்குப் புரியாமலே அவரை தங்கள் விசுவாசியாக மாற்றியிருக்கிறது காலனித்துவம். இதுவே அவர்களின் வெற்றி. இவர்கள் இப்போதும் காலணித்துவ எஜமானர்களின் விசுவாசிகள். சுதேசிகள் முட்டாள்கள் என்றும், எஜமானர்களே அறிவாளிகள் என்றும் கருதும் சிந்தனைப் பற்றாக்குறையுடையவர்கள். ஆசிரியர், அரசியல்வாதி, குருவானவர் என்பதற்காக அவர்கள் பேசும் அனைத்தையும் விமர்சனமின்றி நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற எந்தவித நிர்ப்பந்தமும் எமக்கு இல்லை. தவிர, உண்மையை, சரித்திரத்தை தங்களின் எஜமானர்களுக்காக, தங்கள் பதவிகளின் ஊடாக திரிக்கும்போதும் அமைதியாக இருக்க முடியாது. பெரியவர்களெனினும் எதிர்த்துப்பேச வேண்டியிருக்கிறது. ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை ஏற்படுத்துவதே மோட்சத்திற்கான ஒரே வழி என கருதுபவர்களுக்கும் மேற்குறிப்பிட்ட பாதிரியாருக்கும் என்ன வித்தியாசம் இருக்க முடியும்?

நானும் மிசனரி பாடசாலையிற்தான் கற்றேன். அங்கு ஆசான்கள் சுதேசிகளிக் சரித்திரத்தை நன்கு அறிந்தவர்களாகவே இருந்தார்கள்.

பிரின்ஸ் காசிநாதர் ஒரு முக்கிய பாடசாலையின் அதிபர் என்பதைத் தவிர்த்துப் பார்த்தால் அவர் எமது சமூகங்களுக்காற்றிய சேவை அளப்பரியது. முக்கியமாக யுத்தக்காலத்தில் அவராற்றிய தொண்டு எழுதித் தீராது. கைது செய்யப்பட்டவர்களை மீட்டெடுத்து எத்தனை குடும்பங்களைக் காப்பாற்றியவர். பாராளுமன்ற உறுப்பினராக அவராற்றிய சேவை, ஏனைய பல பதவிகளின் ஊடாக மக்களுக்காற்றிய சேவை என்பவற்றை கருத்திற்கொண்டால் இப்படியானதொரு மனிதனின் இறுதி நிகழ்வினை மட்டக்களப்பின் அரசியல்வாதிகளும், மாநரசபையும் இணைந்து அவருக்கான இறுதி நிகழ்வினை நடாத்தியிருக்கவேண்டும் என்னும் பாரிய உண்மை வெளிப்படும்.

இப்படிப்பட்ட முன்மாதிரியான செயற்பாடுகளைச் ஏன் அரசியவாதிகளும், கல்விச்மூகமும், உயரதிகாரிகளும் சிந்திக்கத் தவறினார்கள்? சமூகம்பற்றிய புரிதலின்மையும், சமூகத்திற்காக இயங்கிய மனிதர்களின் சேவைகளை அறியாத தன்மையுமே இவற்றிற்கான காரணங்கள் என்பதை இலகுவில் புரிந்துகொள்ளலாம்.

ஒலிவாங்கியை பெற்றுக்கொண்டு நேரத்தை மறந்து உரையாற்றியவர்களுள் இருவர் மட்டுமே ஆசானின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். பல அதிகாரிகளுக்கும், புத்திஜீவிகளுக்கும் அதற்கும் நேரமிருக்கவில்லை. பழைய மாணவர்களும், பாடசாலையின் சாரணர்களும், தாள வாத்திய இசைக்குழுவினரும் இல்லை என்றால் இத்தனை காலம் மட்டக்களப்பு சமூகத்திற்கான உழைத்தோய்ந்த மனிதனை சுமப்பதற்கும் நால்வரேனும் இல்லாது போயிருக்கும்.

அவ்வாறான முறையில் அவருக்கு நன்றி செலுத்தியது எமது சமூகமும் அதன் வழிகாட்டிகளும்.

மேற்கூறிய புத்திஜீவிகளின் ஒலிவாங்கி மீதான தீராக் காதலால் ஏற்பட்ட நேரப்பற்றாக்குறையினை அறிந்த, ஆசானுடன் நெருங்கிப்பழகிய பலர் தாமாகவே முன்வந்து "நேரமாகிவிட்டது, சேர் இதை விரும்பவே மாட்டார், எனவே எனது பேச்சை தவிர்த்து நிழ்வினை விரைவாக முடியுங்கள் என்றதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். இந்நிகழ்வினை ஒழுங்குசெய்த பழைய மாணவர்கள் சங்கத்தின் தலைவரது உரையையும் அவர்கள் நிறுத்திக்கொண்டார்கள். ஆசானை நன்கறிந்தவர்கள் தங்கள் உரைகளை சுருக்கிக்கொண்டனர். ஆசானுடன் ஏறத்தாள 30 வருடங்களுக்குமேலாக தினமும் பணியாற்றிய ஒரு ஆசிரியைக்கும் உரையாற்றும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அன்று மாலை வயதான இஸ்லாமியச் சகோதரர் ஒருவர் பாடசாலையின் முன்பகுதியில் நின்றிருந்தார். பாடசாலையை அஞ்சலி பதாதைகளை படம் எடுத்தார். அவருடன் உரையாடும்போது ஆசானின் இறுதி நிகழ்விற்கான கொழும்பில் இருந்து வந்தவர் என்பதும் அவர் வந்தபோது அனைத்து நிகழ்வுகளும் முடிந்திருந்தன என்பதையும் அறிய முடிந்தது. அறுபது வயதுகளை கடந்த அவர் அழுதபடியே தனது காலத்து பாடசாலையைப்பற்றியும், பிரின்ஸ் காசிநாதர்பற்றிய நினைவுகளையும் பகிர்ந்துகொண்டார்.

அந் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஆசானின் மாணவர்கள் யார் யார் என்பதை மிகத்தெளிவாகவே அடையாளம்காண முடிந்தது. ஆசானின் கற்பித்தல் அப்படியானது.

இன்றிரவு ஆசான் கனவில் வந்து, இந்தச் செவிடர்களின் காதில் சங்கூதுகிறாயே என்று எனது கன்னத்தில் அறையக்கூடும். அவர் சொல்வதில் உண்மையுண்டு என்பதை காலம் கற்பித்திருக்கிறது.

தொடர்ச்சி...

## அன்றும் இன்றும் - அங்கம் 02

மனக்காயங்களை மன்னிப்புகள்தான் சுகப்படுத்தும். சந்திரிக்காவும் சந்திரகலாவும் எமக்கு ஓர் உதாரணம்!

தேவநேயப்பாவாணர் அன்று மன்னிப்பு என்ற வார்த்தைக்குச் சொன்ன மூல மொழி பேசப்படும் தேசத்திலும், நடந்த அனைத்தையும் பொறுத்தருள்க என நல்லிணக்கம் பேசப்படும் எங்கள் தேசத்திலும் மனக்காயங்கள் சுகப்படுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும்?



# சிறப்பு மாநாடு

## இலங்கையில் போருக்குப் பின்னரான சமூக - பொருளாதார அபிவிருத்தியில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு

இடம் : புலையவெளி கிராமம், பதுளை வீதி, செங்கலடி, மட்டக்களப்பு
காலம் : 19 (சனிக்கிழமை), ஜனவரி, 2019

### ஏற்பாடு: புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத்தமிழர்கள் அமைப்பு (பிரித்தானியா)

போருக்குப் பின்னரான இலங்கையில் சமூக - பொருளாதார மீளுருவாக்கம் குறித்து இந்த மாநாடு ஆராயும். வழங்கப்படும் உதவிகளை விநியோகிப்பதில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பு, செயற்பாடு குறித்து இது விவாதிக்கும்.

இந்த வகையில், போருக்கு பின்னரான தேவைகள் தொடர்பில் எந்த அளவுக்கு புலம்பெயர் மக்களின் பங்களிப்பு இருக்கிறது என்பதையும், கருத்துருவாக்க சிந்தனைகளிலும் மற்றும் அனைத்து தரப்பினரதும் பங்களிப்புக்கான கொள்கையிலும் இதுவரையிலான அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து கற்றுக்கொண்டவற்றை அர்த்தமுள்ள வகையில் எவ்வாறு பிரயோகிப்பது என்றும் இந்த மாநாடு ஆராயும்.




Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa